TNTL0D0001652022

# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அம்பாசமுத்திரம்

முன்னிலை : **திரு.ப.பிரவீன் ஜீவா,** பி.ஏ., பி.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
(முழு கூடுதல் பொறுப்பு) அம்பாசமுத்திரம்.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் நாள் திங்கள்கிழமை

**அசல் வழக்கு எண். 136/2022**

(CNR.No.TNTL0D-000165-2022)

1. அ/மி ஸ்ரீஅழகு பிள்ளையார் கோவில்
அ/த ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி
அம்பாள் மாதாங் கோவில்
வாகைகுளம் கோயில் டிரஸ்டி இராமநாதன் முதலியார் மூலம்

2. திரு. நாரம்புநாதன்

(1, 2 வாதிகள் தங்களுக்காகவும், வாகைகுளம்
செங்குந்தர் சமுதாய மக்களின்
பிரதிநிதித்துவ நிலைமையில்) ... வாதிகள்

/எதிர்/

திரு. கிருஷ்ணமூர்த்தி ... பிரதிவாதி

இவ்வழக்கானது கடந்த 06.08.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.M.ராஜேந்திரன்**, எம்.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.சி.ராஜு**, பி.எஸ்ஸி.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்ததுமான இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

பிராது தபசில் கோவிலை வாதிகளின் செங்குந்தர் சமுதாய மக்கள் அமைதியாக வழிபாடுகள் செய்தும் மற்றும் திருவிழா நிகழ்ச்சிகள் நடத்தி வருவதை பிரதிவாதியோ, பிரதிவாதியின் வகையாட்களோ, ஏஜெண்டுகளோ கோவிலை அடைத்தோ வேறு எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கக் கோரியும், மற்றும் இவ்வழக்குச் செலவுத்தொகை கோரியும் வாதிகளால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>வழக்குரையின் சுருக்கம்</u> :–**

பிராது தபசில் கோவில் பிரம்மதேசம் கிராமத்தில் உள்ள செங்குந்தர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது. மேற்படி கோவில் சுமார் 100 ஆண்டுகளுக்கும் மேலாக செங்குந்தர் சமுதாய மக்களால் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து அனுபவம் செய்து வரப்படுகிறது. ஆரம்ப காலத்தில் வாகைகுளம் கிராமத்தில் இருந்த செங்குந்தர் சமுதாய குடும்பத்தினரால் தபசில் கோவில் நிர்மானிக்கப்பட்டு, பூஜைகள் செய்து அனுபவம் செய்து வரப்பட்டது. மேற்படி சமுதாய மக்கள் வேலைவாய்ப்பு காரணமாக வாகைகுளம் கிராமத்தின் அருகில் உள்ள பிரம்மதேசம் கிராமத்திற்கு இடம் பெயர்ந்து குடியிருக்க ஆரம்பித்தார்கள். வருடங்கள் போக போக மேற்படி சமுதாய மக்களின் வாரிசுகள் வேலை வாய்ப்பின் காரணமாக வெளியூர்களுக்கு சென்று விட்டார்கள். மேற்படி கோவிலுக்கு பாத்தியப்பட்ட செங்குந்தர் சமுதாய பெரும்பாலான மக்கள் தற்போது பிரம்மதேசம் கிராமத்திலும், அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, அருப்புக்கோட்டை, மதுரை மற்றும் சென்னை ஆகிய இடங்களில் இருந்து வருகிறார்கள். மேற்படி சமுதாய மக்கள் 300 குடும்பங்களுக்கும் அதிகமாக இருந்து வருகிறார்கள்.

(ii) இருந்தபோதிலும், மேற்படியார்கள் தங்களுக்கிடையே வரிகள் பிரித்து தபசில் கோவிலுக்கு செலவுகள் செய்து கோவிலை அபிவிருத்திகள் செய்து தொடர்ச்சியாக அனுபவம் செய்து வருகிறார்கள். கோவிலை நிர்வகிக்கும் பொருட்டு, மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை தங்களுக்குள் நிர்வாக கமிட்டி உறுப்பினர்களை தேர்வு செய்து கோவில் விழாக்களை நடத்தி வரவு செலவு கணக்குகளை சரிபார்த்து, கோவிலுக்கு தேவையான வசதிகளை செய்து வருகிறார்கள்.

அந்த வகையில், கடந்த மூன்று ஆண்டுகளாக 1ம் வாதி, தாவா கோவிலின் நிர்வாக கமிட்டி தலைவராகவும், 2ம் வாதி, நிர்வாக கமிட்டியின் உறுப்பினராகவும் இருந்து வருகிறார்கள். செங்குந்தர் சமுதாய நிர்வாக கமிட்டியின் தலைவர் தான் கோவில் டிரஷ்டியாகவும் இருந்து கோவில் காரியங்களை செய்து வருவது வழக்கமாக இருந்து வருகிறது. அதுசம்பந்தமாக செங்குந்தர் சமுதாய வரிதாரர்கள் கூட்டம் போட்டு தீர்மானமும் இயற்றியுள்ளார்கள். மேலும், தாவா கோவிலுக்கு சுமார் நான்கு தலைமுறைகளுக்கு மேலாக கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு வரப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் வருசாபிஷேகம், சிவராத்திரி விழா மற்றும் பங்குனி உத்தர விழாவும் வாதி சமுதாயம் சார்பாக வரி வசூல் செய்யப்பட்டு, பத்திரிக்கைகள் அடித்து கோவில் நிர்வாக கமிட்டியால் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு தாவா கோவிலை வணங்கி வழிப்பட்டு வரப்படுகிறது.

(iii) தபசில் கோவிலானது சுமார் 15 செண்டு விஸ்தீரணத்தில் அமைந்துள்ளது. வாதி சமுதாய வரிதாரர்களின் நிர்வாக கமிட்டி மூலமாக கோவிலுக்கு சுற்றுச்சுவர் 6 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளது. கோவில் காம்பவுண்டுக்குள் பேச்சி, பரமாட்சி, சுடலை, இருளப்பர் மற்றும் கருப்பசாமி ஆகிய தெய்வங்களின் கல் சிலைகளும், கன்னி மூலையில் தனியாக பிள்ளையார் கோவிலும் இருந்து வருகிறது. தபசில் கோவிலில் கொடி மரம் வைத்து வழிபட்டு வந்த நிலையில், மேற்படி கொடி மரம் பழுதடைந்துவிட்டதால், கடந்த 2005ம் ஆண்டு வாதி சமுதாயத்தினரால் கொடி மரத்திற்காக தேக்கு மரம் வாங்கப்பட்டு, புதிய கொடி மரம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி கொடிமரத்திற்கான தேக்கு மரத்தைக் கொண்டுவருவதற்கு வனத்துறை அதிகாரிகளிடம் உரிய அனுமதியும் பெறப்பட்டுள்ளது. வாதிகள் சமுதாய மக்கள் செலவில், கோவிலை சுற்றி பேவர் பிளாக் டைல்ஸ் மற்றும் கோவிலின் உள்பக்கம் டைல்ஸ் பதிக்கப்பட்டுள்ளது.

(iv) தாவா கோவில் பூஜை செய்யும் பட்டருக்கான சம்பளமும், தபசில் சொத்திற்கான மின் கட்டணமும் (மின் இணைப்பு எண்.07-058-024-4) வாதிகள் சமுதாயத்தின் நிர்வாக கமிட்டியால் செலுத்தப்பட்டு வரப்படுகிறது. மேலும், தபசில்

சொத்திற்கான நத்தம் நிலவரி அடங்கல் பதிவேடும் மாதாங் கோவில் பெயரில் இருந்து வருகிறது. தபசில் கோவிலில் பிரதிவாதிக்கு எவ்விதமான உரிமையோ, அனுபவமோ கிடையாது. பிரதிவாதி செங்குந்தர் சமுதாயத்தைச் சார்ந்தவரும் கிடையாது. அவர் மாற்று சமுதாயத்தைச் சார்ந்தவர் ஆவார். தபசில் கோவிலுக்கு அருகில் பிரதிவாதி குடியிருந்து வருகிறார். பிரதிவாதியின் தகப்பனார் உயிரோடு இருக்கும்போது, சிறிது காலம் தபசில் கோவில் பூசாரியாக இருந்து வந்துள்ளார். அவருக்குரிய சம்பளம் வாதிகள் சமுதாய மக்களால் கொடுக்கப்பட்டுள்ளது. பிரதிவாதியின் தகப்பனாரின் வயது முதிர்வின் காரணமாக அவரால் பூஜைகள் செய்ய முடியாததால், வாதிகள் சமுதாயத்தினர் பட்டார் மூலமாக கும்பாஅபிஷேகம் நடத்தியும், அதனைத் தொடர்ந்து நித்திய பூஜைகள் செய்தும் வழிபாடு செய்து வரப்படுகிறது. மேற்படி பட்டர்க்கான சம்பளம் வாதிகள் கோவில் நிர்வாகம் சார்பாக வழங்கப்படுகிறது.

(v) தபசில் கோவிலுக்கு வரிதாரர்கள் அதிகமாக இருப்பதாலும், கோவிலுக்கு கோபுரம் கட்டியும், முன் மண்டபம் கட்டியும், கோவில் விழிப்பாக இருப்பதால், அதிகாமாக மக்கள் வந்து வழிபாடுகள் செய்து வருகிறார்கள். இதனை அறிந்த பிரதிவாதி தபசில் கோவிலுக்கு அர்ச்சகராக தன்னை நியமிக்கும்படி வாதிகள் நிர்வாகத்திடம் கடந்த 8 மாதங்களுக்கு முன்பு கேட்டபோது வாதிகள் நிர்வாகத்தினர் மறுத்துவிட்டர்கள். வாதிகள் நிர்வாகம் சார்பாக பட்டர் மூலம் பூஜைகள் செய்து வருவதால், அதனை தடை செய்ய முடியாது என்று கூறிவிட்டார்கள். அதன் பிறகும், பிரதிவாதி வெவ்வேறு நபர்கள் மூலம் தன்னை அர்ச்சகராக நியமனம் செய்யும்படி கேட்டு வந்தபோதும் வாதிகள் யாரும் சம்மதிக்கவில்லை. அந்த கோபத்தை மனதில் வைத்துக்கொண்டு வாதிகள் கோவிலில் வழிபாடு செய்து வருவதை பிரதிவாதி பல வகைகளில் இடையூறு செய்து வருகிறார்.

(vi) இந்நிலையில், கடந்த 08.08.2022ம் தேதி காலையில் வாதிகள் கோவிலின் அர்ச்சகர் பூஜைகள் செய்யும்போதும், பிரதிவாதி அவரை தடுத்து கோவிலில் பூஜைகள் எதுவும் செய்யக்கூடாது என்றும், யாரும் வழிபடவும் கூடாது என்றும் வெளிப்படையாக மிரட்டியுள்ளார். மேலும், தனக்கு அர்ச்சகர் பணி தராவிட்டால், கோவிலை பூட்டி விடுவேன் என்றும், யாரும் கோவிலுக்குள் வரமுடியாது என்றும் மிரட்டியுள்ளார். காவல் நிலையத்தில் வாதிகள் மீது பிரதிவாதி கொடுத்த புகாரின்

அடிப்படையில் காவல்துறை அதிகாரிகள் தாவா இடத்தைப் பார்வையிட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்ததில், பிரதிவாதியை சத்தம் போட்டு வாதிகள் சமுதாயத்தினர் வழிபாடுகள் செய்து வருவதை எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று எச்சரித்தார்கள். அதன்பிறகும், பிரதிவாதி வீண் பிரச்சனைகள் செய்து வருகிறார். கடந்த 13.08.2025ம் தேதி காலையில் கோவிலுக்கு வந்த நபர்களிடம் பிரதிவாதி பிரச்சனைகள் செய்துள்ளார். பிரதிவாதி, வாதிகள் நிர்வாகத்திடம் இருந்து கோவில் அர்ச்சகர் பணியை கைப்பற்றும் எண்ணத்தில் பல வகைகளில் இடையூறு செய்து வருகிறார். பிரதிவாதியின் சட்டவிரோத செயல் காரணமாக வாதிகளும், வாதிகள் சமுதாயத்தினரும் தபசில் கோவிலில் அமைதியான முறையில் பூஜைகள் செய்தும், வழிபாடுகள் செய்து வருவதிலும் இடையூறுகள் இருந்து வருகிறது. எனவே, மேலே கண்ட பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3. எதிர்வழக்குரையின் சுருக்கம்</u> :-

வாதிகளின் வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரங்கள் எதுவும் அவர்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல. வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானதல்ல. உண்மையில், பிராது தபசில் கோவிலானது எந்த காலத்திலும் செங்குந்தர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டதல்ல, நிர்வாகம் செய்யப்பட்டிருப்பதுமில்லை மற்றும் செங்குந்தர் சமுதாய மக்களால் திருவிழாக்கள் நடத்தப்படிருப்பதுமில்லை. வாதிகளுக்கு பிரதிநிதி நிலைமையில் வழக்கு தாக்கல் செய்ய எவ்வித உரிமையும் கிடையாது. 1ம் வாதியின் டிரஸ்ட் பதிவு சட்டத்தின்படி பதிவு செய்யப்படாத காரணத்தினால் அவருக்கு வழக்கு தாக்கல் செய்ய எவ்வித சட்டப்படியான உரிமையும் கிடையாது. 1ம் வாதி கோவிலின் டிரஸ்டியும் கிடையாது. 2ம் வாதி சமுதாய மக்களின் பிரதிநிதியும் கிடையாது. அதுசம்பந்தமாக எவ்வித தீர்மானமும் கிடையாது.

(ii) பிராது தபசில் சொத்தான கோவிலுக்கு சுமார் 70 வருடங்களுக்கு முன்னர் அ-மி. வீரமார்த்தாண்டேஸ்வரர் (தற்சமயம் அ-மி. சுப்பிரமணியசாமிகோவில்) மற்றும் மாதா அங்காள ஈஸ்வரி கோவில் ஆகிய இரண்டு கோவில்களுக்கும் பிரதிவாதியின் தகப்பனாரான காலஞ்சென்ற எஸ்.கணபதியாபிள்ளை அவர்கள் அக்தாராக

இருந்துவந்துள்ளார். மேலும், மேற்படி கோவிலில் 05.07.1965ல் அங்காள ஈஸ்வரி மற்றும் ஸ்ரீ அழகு பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற அஷ்டபந்தன கும்பாபிஷேக அழைப்பிதழில் "எஸ்.கணபதியா பிள்ளை, டிரஸ்டி, வாகைக்குளம்" என்று கண்டுள்ளது. மேற்படி கணபதியாபிள்ளை காலஞ்சென்ற பின்னர், பிரதிவாதி, பிராது தபசில் சொத்தான கோவில்களுக்கு டிரஸ்டி ஸ்தானத்திலிருந்து கோவில் காரியங்களை கவனித்துக் கொண்டிருக்கிறார். அதனால்தான் கோவிலின் ஒரு சாவி பிரதிவாதியிடமும், மற்றொரு சாவி பூஜை காரியங்கள் செய்வதற்கு மட்டும் கோவில் பூசாரி வசமும் இருந்து வருகிறது. மேலும், வாகைகுளம் கிராமத்தில் வாதிகளின் சமுதாயத்தினர் என்று கூறும் செங்குந்தர் சமுதாயத்தினரை சார்ந்தவர்கள் யாரும் கிடையாது.

(iii) வாதிகளால் அச்சடிக்கப்பட்ட அழைப்பிதழ்கள், கும்பாபிஷேக அழைப்பிதழ்கள், பத்திரிக்கைகள் மற்றும் நோட்டிஸ்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டாலே பிராது தபசில் சொத்து வாதிகளுக்கோ, வாதிகளின் சமுதாயத்தினர்களுக்கோ பாத்தியப்பட்டது கிடையாது என்பது தெளிவாக தெரியவரும். பிராது தபசில் சொத்தான கோவில்கள் ஞாபகத்திற்கு எட்டாத காலங்களுக்கு முன்னரே பிரதிவாதியின் முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, பூஜை புனஸ்காரங்கள் செய்யப்பட்டு வரப்படுகிறது. பிராது தபசில் சொத்தில் உள்ள கோவில்களின் புனரமைப்புகள் எந்தவொரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களால் மட்டுமே செய்யப்படவில்லை. பிராது தபசில் கோவில் புனரமைப்புகள் அனைத்தும் பிரதிவாதியின் அனுமதியின்பேரில் வெவ்வேறு சமுதாயத்தைச் சேர்ந்த தனிப்பட்ட நபர்களுடைய பங்களிப்பினால் மட்டுமே செய்யப்பட்டுள்ளது. தாவா கோவிலின் பின்பகுதி, கன்னிமூலை விநாயகர் சன்னதி விரிவாக்கம் ஆகியவைகள் பிரதிவாதியின் சகோதரர் கோமதிசங்கரன் அவர்களுக்கு சொந்தமான 5 செண்டு விஸ்தீரணமுள்ள நிலத்தில் தான் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி இடம் தற்போதும் மேற்படி கோமதிசங்கரன் பெயரிலேயே வருவாய்த்துறை ஆவணங்களில் உள்ளது. வாதிகளின் சமுதாயத்தைச் சேர்ந்த யாரும் இதுவரை பிராது தபசில் சொத்தான கோவிலில் எந்தவொரு பொறுப்பிலும் இருந்தது கிடையாது. பிராது தபசில் சொத்தான கோவிலில் 1ம் வாதி டிரஸ்டியாக இருந்ததில்லை. வாதிகளின் சமுதாயத்தினரால் போடப்பட்ட கூட்டங்கள், தீர்மானங்கள், வரவு செலவு கணக்குகள்

சட்டப்படியானதல்ல. அவைகள் பிரதிவாதியை கட்டுப்படுத்தக்கூடியதில்லை. அவைகள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவைகள் ஆகும்.

(iv) வாதிகள் குடியிருந்து வரும் பிரம்மதேசம் கிராமத்தில் உள்ள அ–த. ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி கோவில், பிள்ளையார் கோவில் மற்றும் உச்சிமகாளி அம்மன் கோவில் மட்டும் தான் வாதிகளின் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட கோவில் ஆகும். ஆனால், பிராது தபசில் சொத்தான வாகைகுளம் கிராமத்தில் உள்ள கோவில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட கோவில் என்று கூறுவது பொய்யானது. பிரதிவாதியின் தகப்பனாரான எஸ்.கணபதியாபிள்ளை அவர்கள் பிராதில் கூறியுள்ளதுபோல் ஒருபோதும் பிராது தபசில் சொத்தான கோவிலில் பூசாரியாக இருந்தது கிடையாது. கோவிலில் பூசாரியாக பணியாற்றியதும் கிடையாது. பிரதிவாதியின் தகப்பனார் எஸ்.கணபதியாபிள்ளை அவர்கள் ஜமீன்திருவாலீஸ்வரம் மற்றும் மன்னார்கோவில் கிராமங்களுக்கு கிராம முன்சீப்பாக 40 வருடங்களுக்கும் மேலாக பணியாற்றியுள்ளார். எனவே, அரசு பணியில் இருந்த ஒருவரை கோவில் பூசாரியாக இருந்தார் என்று பிராதில் கூறியுள்ளது முற்றிலும் பொய்யானது.

(v) பிரதிவாதியின் தகப்பனாரான எஸ்.கணபதியாபிள்ளை 1983ம் ஆண்டு வரை பிராது தபசில் சொத்தான கோவிலில் டிரஸ்டியாக இருந்து வந்துள்ளார். அவரது காலத்திற்கு பின்னர் தற்போது வரை பிரதிவாதி டிரஸ்டியாக இருந்து வருகிறார். அதனால் கோவிலில் உள்ள இரண்டு சாவிகளில் ஒரு சாவி பிரதிவாதி வசமும், மற்றொரு சாவி கோவில் பூசாரி வசமும் இருக்கும். இந்நிலையில், பிரதிவாதி டிரஸ்டியாக இருந்து வருவதால் பிரச்சனை செய்து, பிரதிவாதியின் பதவிக்கு இடைஞ்சல்கள் செய்து வந்தனர். இதுகுறித்து பிரதிவாதி வாகைகுளம் கிராம நிர்வாக அதிகாரி அவர்களிடம் புகார் அளித்ததில் இது சம்பந்தமாக மேற்படி கிராம நிர்வாக அதிகாரி அவர்கள் அம்மையப்பன், இராமநாதன் மற்றும் பிரதிவாதி ஆகியோரிடம் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று, விசாரணை விபரத்தை அம்பாசமுத்திரம் தாசில்தார் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, தாசில்தார் விசாரணையில், வாதிகள் செய்தது தவறு என்றும், பிரதிவாதி டிரஸ்டியாக பணிபுரிவதை

யாதொரு தடையும் செய்யக்கூடாது என்றும், பிரதிவாதியின் அனுமதியுடன் கோவிலில் திருவிழா நடத்தலாம் என்றும், பிராது தபசில் சொத்தான கோவில் பிரதிவாதிக்கும், பிரதிவாதியின் குடும்பத்திற்கும் மட்டுமே பாத்தியப்பட்ட கோவில் என்று கூறி பிரச்சனையை முடித்து வைத்தார்கள்.

(vi) வாதிகள் கூறுவது போல், பிரதிவாதி ஒருபோதும் தன்னை பிராது தபசில் கோவிலில் அர்ச்சகராக நியமிக்க வேண்டி யாரிடமும் கேட்டதில்லை. பிரதிவாதி பிராது தபசில் சொத்தான கோவிலில் டிரஸ்டியாக இருந்து வருவதால், கோவிலில் நடந்துவரும் பூஜை புனஸ்காரங்கள் செய்யும் உரிமை ஏற்கனவே சித்தித்துள்ளது. இதுசம்பந்தமாக சென்னை காவல்துறை தலைவர், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோர்களுக்கு புகார் மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், வாதிகள் பிராது தபசில் கோவிலை கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் கோவிலை மேல்பூட்டு போட்டு பூட்டிவிட்டார்கள். இதுகுறித்து பிரதிவாதியால், அம்பாசமுத்திரம் காவல் நிலையத்தில் மனு எண்.258/2022 ன்டி புகார் மனு கொடுக்கப்பபட்டு, விசாரணையும் நடைபெற்று வாதிகள் எச்சரிக்கப்பட்டார்கள்.

(vii) 1ம் வாதி பிராது தபசில் சொத்தின் கோவிலின் டிரஸ்டி நிலைமையிலும், 2ம் வாதி பிராது தபசில் சொத்தின் கோவிலின் பிரதிநிதி நிலைமையிலும் வழக்கு தாக்கல் செய்திருப்து சட்டப்படி எற்றுக்கொள்ளக்கூடியதல்ல. 1ம் வாதி பிராது தபசில் சொத்தான கோவிலின் டிரஸ்டியும் கிடையாது. 2ம் வாதி செங்குந்தர் சமுதாயத்தில் ஒரு முக்கிய நபரும் கிடையாது. 2ம் வாதி சமுதாயத்திற்காக பிரதிநிதி நிலைமையில் வழக்கு தாக்கல் செய்ய சமுதாய மக்களால் யாதொரு உரிமையும் கொடுக்கப்படவில்லை. இதுசம்பந்தமாக வாதிகள் கூறும் சமுதாயத்தில் யாதொரு தீர்மானமும் இயற்றப்படத்தக்கதுமில்லை. அவ்வாறிருந்தாலும், அது பிரதிவாதியை கட்டுப்படுத்தாது. மேலும், பிராது தபசில் சொத்தான கோவில் யாரால், எந்த வருடம், எத்தகைய வகைப்பாடான நிலத்தில் அமைக்கப்பட்டது என்ற விபரம் பிராது கூறப்படவில்லை.

(viii) மேலும், பிராது தபசில் சொத்தான கோவில் பிரதிவாதியின் குடும்ப நிலத்திற்கு அருகில் இருந்த அரசு புறம்போக்கு நிலத்தில் நிறுவப்பட்டு, பின்னர் காலப்போக்கில் திருக்கோவிலின் பெயருக்கு பட்டா பெறப்பட்டு, தற்போதும் பிராது தபசில் கோவில் வளாகத்தில் அமைந்துள்ள சர்வே எண். 131/4 இடத்தில் உள்ள கன்னிவிநாயகர் சன்னதியும் பிரதிவாதியின் சகோதரர் கோமதி சங்கரன் அவர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் கட்டுப்பட்டு, நாளது தேதி வரை மேற்படி கோமதி சங்கரன் அவர்கள் பெயரிலேயே அனைத்து ஆவணங்களும் இருந்து வருகிறது. மேலும், பிராது தபசில் சொத்தான திருக்கோவில் பிரதிவாதியின் குடும்பத்திற்கு மட்டுமே பாத்தியப்பட்ட தனிப்பட்ட கோவிலாக இருந்தபோதிலும், கோவிலின் நன்மை மற்றும் பொது மக்களின் நன்மையை கருத்தில்கொண்டு பிரதிவாதி மற்ற சமுதாயத்தைச் சார்ந்தவர்களையும் கோவிலில் வழிபாடு செய்ய அனுமதித்தும், மற்றும் நன்கொடைகள் பெற்றும், கோவிலை அபிவிருத்திகள் செய்தும் வருகிறார்கள். அதனடிப்படையில், தான் வேறு ஊர்களில் வசிக்கும் செங்குந்தர் சமுதாயத்தைச் சேர்ந்த சிலரும் அனுமதிக்கப்பட்டு, கோவிலில் அபிவிருத்தி வேலைகளை செய்துள்ளர்கள். சட்டப்படி பிராது தபசில் சொத்தான கோவிலும், கோவில் நிர்வாகமும் வாதிகளின் சமுதாயத்தினர் வசம் கிடையாது. வாதிகள், பிரதிவாதியின் பிராது தபசில் கோவிலின் பரம்பரை நிர்வாக பொறுப்பையும், கோவில் பாத்தியதையையும் கேள்வி கேட்க Estoppel என்னும் தோஷத்தால் தடைபட்டிருக்கிறார்கள்.

(ix) வாதிகள் கூறுவதுபோல், இராமநாதன் முதலியார் டிரஸ்டியும் அல்ல. 2ம் வாதி நாரம்புநாதன் என்பவர் கமிட்டி உறுப்பினரும் அல்ல. அப்படியொரு கமிட்டியும் கிடையாது. இதுசம்பந்தமாக பொய்யான மற்றும் மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. வாதிகள் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்கள் Self Serving ஆவணங்கள் என்பதால், அந்த ஆவணங்கள் பிரதிவாதியை கட்டுப்படுத்தக்கூடியதில்லை. பிராது தபசில் சொத்தான கோவில் பிரதிவாதியின் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட கோவில் என்பதால், பிராது தபசில் சொத்தினைப் பொறுத்து வாதிகள் அவர்களது உரிமையை நிலைநாட்டும் வகையில், விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல.

(x) உண்மையிலேயே, பிராது தபசில் கோவிலில் வாதிகளுக்கு ஏதேனும் உரிமை இருப்பின் அந்த உரிமையை நிலைநாட்ட தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சட்டத்தின் கீழ் உரிய அதிகாரிகளிடம் மனு செய்து பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும். அவ்வாறு வாதிகள் செங்குந்தர் சமுதாயத்தினர் உத்தரவு ஏதும் பெற்று அதன் பின் பிரதிவாதி மேற்படி உத்தரவிற்கு விரோதமாக செயல்பட்டால் மட்டுமே நிர்வாக பொறுப்பில் உள்ளவர்கள் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியும். மேலும், பிராது தபசில் சொத்தைப் பொறுத்து வாதிகள் கூறும் சொத்து விபரங்கள், விஸ்தீரணம் மற்றும் எல்கை விவரங்கள் தவறானது. எனவே, வாதிகளின் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4.** வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் வழக்கு ஆவணங்கள் ஆகியவற்றை பரீசிலித்து இருதரப்பிலும் முரண்படும் சங்கதிகளைப் பொறுத்து கீழ்கண்ட எழுவினாக்கள் கடந்த 23.12.2022 அன்று இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டுள்ளது.

**எழுவினாக்கள்**

| | |
|---|---|
| **1)** | **Whether the Plaintiffs namely Ramanathan Mudhaliyar and Narambunathan are having the locus standi to file the suit on behalf of the suit temple?** |
| **2)** | **Whether the suit property belongs to the Senguntha Mudhaliyar community as claimed by the Plaintiffs?** |
| **3)** | **Whether the defendant is the trustee of the suit temple as claimed by the defendant?** |
| **4)** | **Whether the Plaintiffs are entitled the relief of Permanent injunction as prayed for?** |
| **5)** | **To what other relief the Plaintiffs are entitled?** |

**5.** இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் பிராது தபசில் சொத்தான கோவில் பிரதிவாதியின் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட கோவில் என்றும், அந்த வகையில், பிராது பிராது தபசில் சொத்தினைப் பொறுத்து வாதிகள் அவர்களது உரிமையை நிலைநாட்டும் வகையில் விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என எதிர்வழக்குரையில் ஆட்சேபனை செய்யப்பட்டு, அதற்கிணங்க வாதமும் செய்யப்பட்டுள்ளது.

உரிமையியல் விசாரணை முறைச் சட்டம், கட்டளை 14 விதி 5ன்படி, வனையப்படாமல் விடுபட்டுள்ள மேற்படி சங்கதிகளைப் பொறுத்து தீர்ப்பு பகரப்படுவதற்கு முன்பு வழக்கின் எந்த காலகட்டத்திலும் நீதிமன்றத்தால் வனையப்பட முடியும் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேற்கண்ட சட்டப்பிரிவின் அடிப்படையில், தரப்பினர்களுக்கிடையே உள்ள பிரச்சனைகளை அறுதியாக தீர்மானிக்கும் பொருட்டும், நீதியின் நலனைக் கருத்தில்கொண்டு கீழ்க்கண்டவாறு கூடுதல் எழுவினா வனையப்படுகிறது.

கீழ்கண்டவாறு வனையப்படும் கூடுதல் எழுவினா சம்மந்தமாக உபயதரப்பினர்கள் சார்பில் ஏற்கனவே போதுமான வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும், வாதவுரையும் செய்யப்பட்டிருப்பதால், தகுதியின் அடிப்படையில் இந்த வழக்கை தீர்மானிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**கூடுதல் எழுவினா –1**

| | |
|---|---|
| 2. | **தாவா சொத்தான கோவிலைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல், நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள வாதிகளின் இந்த தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கதா?** |

**6.** இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் 2ம் வாதி திரு. நாரம்புநாதன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர்மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும், (வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது.) வாதிகள் தரப்பில் பி.சா.1 ஐ குறுக்குவிசாரணையின்போது வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.11 சான்றாவணங்கள்

குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சிகளாக திரு.ஐயப்பன் என்பவர் வா.சா.2 ஆகவும், திரு.அரிகிருஷ்ணன் என்பவர் வா.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். வா.சா.2 மற்றும் வா.சா.3 ன் மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

(வா.சா.1 ன் சாட்சியத்தில் தாவா கோவிலின் புகைப்படம் மற்றும் கல்வெட்டுகளை காட்டும் புகைப்படம் சி.டி. உடன் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.8 ஆக தவறாக குறியீடு செய்யப்பட்டுள்ள மேற்படி இரண்டு ஆவணங்களையும் மாற்றி, தாவா கோவிலை காட்டும் புகைப்படம் (எண்ணம்–5) குறுந்தகடுடன் கூடியதை வா.சா.ஆ.8 ஆகவும், வாதி கோவிலில் உள்ள கல்வெட்டுகளின் புகைப்படங்கள் (எண்ணம்–3)–ஐ வா.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)

பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்தபோது, பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 சான்றாவணங்களும், வா.சா.2 ஐ குறுக்குவிசாரணை செய்தபோது, பி.சா.ஆ.3 முதல் பி.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி திரு.கிருஷ்ணமூர்த்தி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர்மூலம் பி.சா.ஆ.6 முதல் பி.சா.ஆ.27 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பு கூடுதல் சாட்சியாக அடையகருங்குளம் கிராம நிர்வாக அலுவலர் திரு.பிரேம்குமார் மைக்கேல் அவர்கள் பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பி.சா.2–ன் மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>**எழுவினாக்கள் 1 முதல் 4 ற்கான தீர்வு**</u> : –

| | |
|---|---|
| **1)** | **Whether the Plaintiffs namely Ramanathan Mudhaliyar and Narambunathan are having the locus standi to file the suit on behalf of the suit temple?** |
| **2)** | **Whether the suit property belongs to the Senguntha Mudhaliyar community as claimed by the Plaintiffs?** |
| **3)** | **Whether the defendant is the trustee of the suit temple as claimed by the defendant?** |
| **4)** | **Whether the Plaintiffs are entitled the relief of Permanent injunction as prayed for?** |

**7.** வாதிகள் தரப்பு வாதத்தில், பிராது தபசில் கோவில் பிரம்மதேசம் கிராமத்தில் உள்ள செங்குந்தர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்படி கோவிலானது சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் செங்குந்தர் சமுதாய மக்களால் ஸ்தாபிக்கப்பட்டு, தினசரி பூஜைகள் செய்து, அதனைத் தொடர்ந்து கும்பாபிஷேகம் (**வா.சா.ஆ.5**), வருசாபிஷேகம், சிவராத்திரி விழா (**வா.சா.ஆ.4**) மற்றும் பங்குனி உத்தர விழாவும் வாதி சமுதாய மக்களால் வரி வசூல் செய்யப்பட்டு, பத்திரிக்கைகள் அடித்து கோவில் நிர்வாக கமிட்டியால் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, வரவு செலவு கணக்குகள் (**வா.சா.ஆ.2**) பார்த்தும், மின் கட்டணம் (**வா.சா.ஆ.6**) செலுத்தியும் செங்குந்தர் சமுதாய மக்களால் தொடர்ந்து அனுபவம் செய்து வரப்படுகிறது என்றும்,

(ii) தபசில் கோவிலுக்கு பாத்தியப்பட்ட செங்குந்தர் சமுதாய மக்களில் சுமார் 300 குடும்பங்களுக்கும் மேற்பட்டவர்கள் பணி நிமித்தம் காரணமாக பிரம்மதேசம், அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, அருப்புக்கோட்டை, மதுரை மற்றும் சென்னை ஆகிய இடங்களில் வசித்து வருகிறார்கள் என்றும், இருந்தபோதிலும், மேற்படியார்கள் தங்களுக்கிடையே வரிகள் பிரித்து தபசில் கோவிலுக்கு செலவுகள் செய்து கோவிலை அபிவிருத்திகள் செய்து தொடர்ச்சியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், தாவா கோவிலை நிர்வகிக்கும் பொருட்டு, மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை தங்களுக்குள் நிர்வாக கமிட்டி உறுப்பினர்களை தேர்வு செய்து வருவதன் அடிப்படையில், கடந்த மூன்று ஆண்டுகளாக 1ம் வாதி, தாவா கோவிலின் நிர்வாக கமிட்டி தலைவராகவும் மற்றும் கோவில் டிரஸ்டியாகவும், 2ம் வாதி, நிர்வாக கமிட்டியின் உறுப்பினராகவும் இருந்து வருகிறார்கள் என்றும், அதுசம்பந்தமாக செங்குந்தர் சமுதாய வரிதாரர்கள் கூட்டம் போட்டு தீர்மானமும் (**வா.சா.ஆ.1**) இயற்றியுள்ளார்கள் என்றும்,

(iii) தபசில் கோவிலானது சுமார் 15 செண்டு விஸ்தீரணத்தில் அமைந்துள்ளது என்றும், தபசில் கோவிலில் உள்ள கொடி மரம் பழுதடைந்துவிட்டதால், வனத்துறை அனுமதியுடன் (**வா.சா.ஆ.7**) தேக்கு மரம் வாங்கப்பட்டு, புதிய கொடி மரமானது கடந்த 2005ம் ஆண்டு வாதி சமுதாயத்தினரால் அமைக்கப்பட்டுள்ளது என்றும், மேலும்,

தபசில் சொத்திற்கான நத்தம் நிலவரி அடங்கல் பதிவேடும் (**வா.சா.ஆ.3**) மாதாங்கோவில் பெயரில் உள்ளது என்றும், தாவா கோவிலுக்குரிய புகைப்படம் மற்றும் கல்வெட்டுகள் **வா.சா.ஆ.8** மற்றும் **வா.சா.ஆ.9** ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதியின் தகப்பனார் சிறிது காலம் தபசில் கோவில் பூசாரியாக இருந்து வந்துள்ளார் என்றும், அதன்பின்னர், பிரதிவாதியை தபசில் கோவிலுக்கு அர்ச்சகராக நியமிக்கும்படி கேட்டபோது, வாதிகள் நிர்வாகம் சார்பாக பட்டர் மூலம் பூஜைகள் செய்து வருவதால், அதனை தடை செய்ய முடியாது என்று கூறிவிட்டார்கள் என்றும், அதன் பிறகும், பிரதிவாதி வெவ்வேறு நபர்கள் மூலம் தன்னை அர்ச்சகராக நியமனம் செய்யும்படி கேட்டு வந்தபோதும் வாதிகள் யாரும் சம்மதிக்கவில்லை என்றும், அதனை மனதில் வைத்துக்கொண்டு வாதிகள் கோவிலில் வழிபாடு செய்து வருவதை சட்டத்திற்கு புறம்பாக பிரதிவாதி பல வகைகளில் இடையூறு செய்து வருகிறார் என்றும், தாவா கோவிலில் பிரதிவாதிக்கு யாதொரு உரிமையும், அனுபவமும் கிடையாது என்றும், மேற்கண்ட சங்கதிகள் வாதிகள் தரப்பு வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்கள் மூலமாகவும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்களின் மூலமாகவும் வாதிகளின் வழக்கானது நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றும் வாதம் செய்யப்பட்டு, அதனை அனுசரித்து வாதிகள் தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதுரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8.** பிரதிவாதி தரப்பு வாதத்தில், வாதிகள் கூறுவதுபோல், பிராது தபசில் கோவிலானது செங்குந்தர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டதல்ல என்றும், 1ம் வாதி கோவிலின் டிரஸ்டியும் கிடையாது என்றும், 2ம் வாதி சமுதாய மக்களின் பிரதிநிதியும் கிடையாது என்றும், அதுசம்பந்தமாக எவ்வித தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை என்றும், பிராது தபசில் சொத்தான கோவிலுக்கு சுமார் 70 வருடங்களுக்கு முன்னர் பிரதிவாதியின் தகப்பனாரான காலஞ்சென்ற எஸ்.கணபதியாபிள்ளை அவர்கள் அக்தாராக இருந்துவந்துள்ளார் என்றும், மேற்படி விபரம் தாவா கோவிலில் 05.07.1965ல் நடைபெற்ற அஷ்டபந்தன கும்பாபிஷேக அழைப்பிதழில் (**பி.சா.ஆ.2**) "எஸ்.கணபதியா பிள்ளை, டிரஸ்டி, வாகைக்குளம்" என்று குறிப்பிட்டுள்ளதன் மூலம்

தெரியவரும் என்றும், மேற்படி கணபதியாபிள்ளை காலஞ்சென்ற பின்னர், பிரதிவாதி, பிராது தபசில் சொத்தான கோவில்களுக்கு டிரஸ்டி ஸ்தானத்திலிருந்து கோவில் காரியங்களை கவனித்துக் கொண்டிருக்கிறார் என்றும்,

(ii) வாதிகளால் அச்சடிக்கப்பட்ட அழைப்பிதழ்கள் (**பி.சா.ஆ.2**), கும்பாபிஷேக அழைப்பிதழ்கள் (**பி.சா.ஆ.5**), பத்திரிக்கைகள் மற்றும் நோட்டிஸ்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டாலே பிராது தபசில் சொத்து வாதிகளுக்கோ, வாதிகளின் சமுதாயத்தினர்களுக்கோ பாத்தியப்பட்டது கிடையாது என்பது தெளிவாக தெரியவரும் என்றும், பிராது தபசில் சொத்தான கோவில்கள் ஞாபகத்திற்கு எட்டாத காலங்களுக்கு முன்னரே பிரதிவாதியின் முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, பூஜைகள் செய்யப்பட்டு வரப்படுகிறது என்றும், பிராது தபசில் கோவில் புனரமைப்புகள் அனைத்தும் பிரதிவாதியின் அனுமதியின்பேரில் வெவ்வேறு சமுதாயத்தைச் சேர்ந்த தனிப்பட்ட நபர்களுடைய பங்களிப்பினால் மட்டுமே செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா கோவிலின் பின்பகுதி, கன்னிமூலை விநாயகர் சன்னதி விரிவாக்கம் ஆகியவைகள் பிரதிவாதியின் சகோதரர் கோமதிசங்கரன் அவர்களுக்கு சொந்தமான 5 செண்டு விஸ்தீரணமுள்ள நிலத்தில் தான் அமைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி இடம் தற்போதும் மேற்படி கோமதிசங்கரன் பெயரிலேயே வருவாய்த்துறை ஆவணங்களில் உள்ளது என்றும், வாதிகளின் சமுதாயத்தைச் சேர்ந்த யாரும் இதுவரை பிராது தபசில் சொத்தான கோவிலில் எந்தவொரு பொறுப்பிலும் இருந்தது கிடையாது என்றும், வாதிகளின் சமுதாயத்தினரால் போடப்பட்ட கூட்டங்கள், தீர்மானங்கள், வரவு செலவு கணக்குகள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவைகள் என்றும்,

(iii) வாதிகள் குடியிருந்து வரும் பிரம்மதேசம் கிராமத்தில் உள்ள அ/த. ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி கோவில், பிள்ளையார் கோவில் மற்றும் உச்சிமகாளி அம்மன் கோவில் மட்டும் தான் வாதிகளின் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட கோவில் என்றும், ஆனால், பிராது தபசில் சொத்தான வாகைகுளம் கிராமத்தில் உள்ள கோவில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட கோவில் கிடையாது என்றும், பிரதிவாதியின் தகப்பனாரான எஸ்.கணபதியாபிள்ளை 1983ம் ஆண்டு வரை பிராது தபசில் சொத்தான கோவிலில் டிரஸ்டியாக இருந்து வந்துள்ளார் என்றும், அவரது காலத்திற்கு பின்னர் பிரதிவாதி

டிரஸ்டியாக இருந்து வருகிறார் என்றும், இந்நிலையில், பிரதிவாதி டிரஸ்டியாக இருந்து வருவதால் பிரச்சனை செய்து, பிரதிவாதியின் பதவிக்கு இடைஞ்சல்கள் செய்து வந்தனர் என்றும், இதுகுறித்து பிரதிவாதி வாகைகுளம் கிராம நிர்வாக அதிகாரி அவர்களிடம் புகார் (**பி.சா.ஆ.6**) அளிக்கப்பட்டு, விசாரணை செய்து, சம்பந்தப்பட்டவர்களிடம் வாக்குமூலம் பெற்று, விசாரணை விபரத்தை அம்பாசமுத்திரம் தாசில்தார் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, தாசில்தார் விசாரணையில், பிரதிவாதி டிரஸ்டியாக பணிபுரிவதை யாதொரு தடையும் செய்யக்கூடாது என்றும், பிரதிவாதியின் அனுமதியுடன் கோவிலில் திருவிழா நடத்தலாம் என்றும், பிராது தபசில் சொத்தான கோவில் பிரதிவாதிக்கும், பிரதிவாதியின் குடும்பத்திற்கும் மட்டுமே பாத்தியப்பட்ட கோவில் என்று கூறி பிரச்சனையை முடித்து வைத்தார்கள் என்றும்,

(iv) மேலும், தாவா கோவில் பிரச்சனை குறித்து பிரதிவாதியால், சென்னை காவல்துறை தலைவர், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோர்களுக்கு புகார் மனுக்கள் கொடுக்கப்பட்டும், பிராது தபசில் கோவிலை கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் வாதிகள் கோவிலை மேல்பூட்டு போட்டு பூட்டிவிட்டார்கள் என்றும், இதுகுறித்து பிரதிவாதியால், அம்பாசமுத்திரம் காவல் நிலையத்தில் மனு எண்.258/2022 (**பி.சா.ஆ.3**)–ன்டி புகார் மனு கொடுக்கப்பட்டது என்றும், மேலும், பிராது தபசில் சொத்தான கோவில் யாரால், எந்த வருடம், எத்தகைய வகைப்பாடான நிலத்தில் அமைக்கப்பட்டது என்ற விபரம் பிராது கூறப்படவில்லை என்றும், பிராது தபசில் சொத்தான கோவில் பிரதிவாதியின் குடும்ப நிலத்திற்கு அருகில் இருந்த அரசு புறம்போக்கு நிலத்தில் நிறுவப்பட்டு, பின்னர் திருக்கோவிலின் பெயருக்கு பட்டா பெறப்பட்டுள்ளது என்றும்,

(v) மேலும், பிராது தபசில் சொத்தான திருக்கோவில் பிரதிவாதியின் குடும்பத்திற்கு மட்டுமே பாத்தியப்பட்ட தனிப்பட்ட கோவிலாக இருந்தபோதிலும், கோவிலின் நன்மை மற்றும் பொது மக்களின் நன்மையை கருத்தில்கொண்டு பிரதிவாதி மற்ற சமுதாயத்தைச் சார்ந்தவர்களையும் கோவிலில் வழிபாடு செய்ய அனுமதித்தும், மற்றும் நன்கொடைகள் பெற்றும், கோவிலை அபிவிருத்திகள் செய்தும் வருகிறார்கள் என்றும், அதனடிப்படையில், தான் வேறு ஊர்களில் வசிக்கும்

செங்குந்தர் சமுதாயத்தைச் சேர்ந்த சிலரும் அனுமதிக்கப்பட்டு, கோவிலில் அபிவிருத்தி வேலைகளை செய்துள்ளர்கள் என்றும், சட்டப்படி பிராது தபசில் சொத்தான கோவிலும், கோவில் நிர்வாகமும் வாதிகளின் சமுதாயத்தினர் வசம் கிடையாது என்றும்,

(vi) பிராது தபசில் சொத்தான கோவில் பிரதிவாதியின் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட கோவில் என்பதால், பிராது தபசில் சொத்தினைப் பொறுத்து வாதிகள் அவர்களது உரிமையை நிலைநாட்டும் வகையில், விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேற்கண்ட சங்கதிகளின் அடிப்படையில், வாதிகளின் வழக்கானது தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்றும், பிரதிவாதியின் எதிர்வழக்கானது பி.சா.1 மற்றும் பி.சா.2 சாட்சிகளின் சாட்சியங்கள் மூலமாகவும், பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.27 வரையிலான சான்றாவணங்களின் மூலமாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, வாதிகளின் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டு, அதனை அனுசரித்து பிரதிவாதி தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதுரை குறிப்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9. வாதிகள் மற்றும் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேற்கண்ட எழுத்துப்பூர்வமான வாதுரை குறிப்புகள் மற்றும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேற்கண்ட முன்தீர்ப்பு சங்கதிகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.**

**10. பிரதிவாதி கூறுவது போல், பிரதிவாதி பிராது கோயிலின் அறங்காவலரா? என்பதனைப் பொறுத்து வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்து பார்க்கும்போது,**

தாவா சொத்தானது செங்குந்தர் சமுதாயத்தினரால் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்ட கோவில் என்றும், மேற்படி கோவில் செங்குந்தர் சமுதாயத்திற்கு மட்டும் பாத்தியப்பட்ட கோவில் என்றும், செங்குந்தர் சமுதாய மக்கள் ஆரம்பத்தில் வாகைகுளத்தில் வாழ்ந்து வந்து பின்னர், தொழில் காரணமாக பிரம்மதேசம், அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, அருப்புக்கோட்டை, மதுரை மற்றும் சென்னை

ஆகிய பகுதிகளில் 300 குடும்பங்களுக்கும் அதிகமாக வசித்து வருகிறார்கள் என்று வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தாவா சொத்து வாதிகள் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதரவாக கோவில் சம்பந்தப்பட்ட மினிட் புக் வரவு செலவு விபரம் அடங்கல் பதிவேடு, சிவராத்திரி விழா அழைப்பிதழ்கள், கும்பாபிஷேக அழைப்பிதழ்கள், கோவில் மின் கட்டண ரசீது, கோவில் கொடி மரம் வாங்குவதற்கு வனத்துறை வழங்கிய அனுமதி கடிதம், தாவா கோவிலின் புகைப்படம் ஆகிய ஆவணங்கள் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

**11.** மேற்படி வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்வதில் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ள போதிலும், மேற்படி ஆவணங்களை என்ன காரணத்திற்காக குறியீடு செய்வதில் ஆட்சேபனை என்ற எந்தவொரு விபரங்களும் ஆட்சேபனையில் குறிப்பிட்டு பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்படவில்லை. எனவே, பிரதிவாதி தரப்பு ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டு, வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**12.** பிரதிவாதி தரப்பில் வாதிகள் தரப்பு வழக்கிற்கு மாறாக தாவா சொத்தான கோவில் செங்குந்தர் சமுதாயத்திற்கு தனித்துப் பாத்தியப்பட்ட கோவில் இல்லை என்றும், பிராது தபசிலில் குறிப்பிடப்பட்டுள்ள கோவில் நியாபத்திற்கு எட்டாத காலங்களுக்கு முன்னரே பிரதிவாதியின் முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்டது என்றும், தபசில் கோவில் புணரமைப்புகள் அனைத்தும் பிரதிவாதியின் அனுமதியின்பேரில்தான் வெவ்வேறு சமுதாயத்தைச் சேர்ந்த நபர்களின் தனிப்பட்ட பங்களிப்பினால் மட்டுமே செய்யப்பட்டது என்றும், தாவா கோவில் பிரதிவாதி குடும்பத்திற்கு மட்டுமே பாத்தியப்பட்ட தனிக்கோவிலாக இருந்தபோதிலும், கோவிலின் நன்மை மற்றும் பொது மக்களின் நன்மை கருதி பிற சமுதாயத்தைச் சார்ந்தவர்களையும் கோவிலில் வழிபட அனுமதித்துள்ளார் என்றும், தாவா கோவிலில் பிரதிவாதியின் தகப்பனார் டிரஸ்டியாக இருந்து நிர்வகித்து வந்துள்ளார் என்றும், வாதிகளுக்கு மட்டும் தாவா கோவில் பாத்தியப்பட்டதல்ல என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், தாவா சொத்து அரசு புறம்போக்கு

நிலத்தில் அமைந்துள்ளது என்பதற்கு ஆதரவாக பி.சா.ஆ.1 ஆவணமும், பிரதிவாதியின் தகப்பனார் தபசிலில் குறிப்பிடப்பட்டுள்ள கோவிலுக்கு டிரஸ்டியாக கடந்த 05.07.1965 ம் வருடம் இருந்தார் என்பதற்கு ஆதரவாக பி.சா.ஆ.2 ஆவணமும், வாதிகள் கோவிலில் பூட்டு போட்டதால், அதனை அகற்றக்கோரி கடந்த 08.08.2022 ம் தேதி அம்பாசமுத்திரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக புகார் மனு ரசீது பி.சா.ஆ.3 ஆவணமும், பிரம்மதேசத்தில் உள்ள அங்காள பரமேஸ்வரி கோவிலில் நடைபெற்ற வருஷாபிசேக விழா மற்றும் மகா சிவராத்திரி அழைப்பிதழ் பி.சா.ஆ.4 ஆவணமும், தபசில் கோவில் அனைவருக்கும் பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதரவாக 1998 ம் வருடம் நடைபெற்ற கும்பாபிசேக அழைப்பிதழை பி.சா.ஆ.5 ஆவணமும், வாதிகள் சட்டவிரோதமாக கோவிலை அபகரிக்க முயல்வதாக வாதிகள் மீது புகார் கொடுத்தது சம்பந்தமாக பி.சா.ஆ.6 மற்றும் பி.சா.ஆ.7, பி.சா.ஆ.11 முதல் பி.சா.ஆ.24 வரையிலான ஆவணங்களும், பிராது சொத்தைப் பொறுத்து பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் உள்ள கிரைய ஆவணம், பிரதிவாதியின் சகோதரர் பெயரில் உள்ள பட்டா மற்றும் கோமதி சங்கரன் பெயரில் உள்ள நன்கொடை ஆவணம், பிரதிவாதிக்கு எதிராக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பிராது தபசில் சொத்தைப் பொறுத்து இடையூறு செய்யக்கூடாது என்று தாக்கல் செய்த மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் முன்தீர்ப்பு ஆகிய ஆவணங்களை பி.சா.ஆ.8, பி.சா.ஆ.9, பி.சா.ஆ.25, பி.சா.ஆ.27 ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளார் என்று தெரியவருகிறது.

**13.** பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.6, பி.சா.ஆ.7 பி.சா.ஆ.9, பி.சா.ஆ.10, பி.சா.ஆ.11, பி.சா.ஆ.14, பி.சா.ஆ.15 ஆகிய ஆவணங்கள் அசல் ஆவணங்கள் வரவழைக்கப்படாமல் கைநகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், வாதிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. மேலும், பி.சா.ஆ.8 அசல் ஆவணம் தாக்கல் செய்யப்படாததால், ஆட்சேபனை செய்யப்பட்டுள்து. அதேபோல், பி.சா.ஆ.18 முதல் பி.சா.ஆ.21 மற்றும் பி.சா.ஆ.22 முதல் பி.சா.ஆ.24 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு உருவாக்கப்பட்டவை என்பதாலும், பி.சா.ஆ.23 ஆவணம் என்பது பொது தகவல் அலுவலர் வழங்கிய தகவல் என்பதாலும், ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்படி ஆட்சேபனையுடன் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி

ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, பிரதிவாதி அவர் கொடுத்த புகார் நகலின் கைநகல்களை தாக்கல் செய்துள்ளார். அது மோசடியாக உருவாக்கப்பட்டது என்று பிரதிவாதி தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. அதேபோல், பி.சா.ஆ.8 மற்றும் பி.சா.ஆ.23 ஆவணம் பொது ஆவணம் என்பதால், வாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள ஆட்சேபனை ஏற்றுக்கொள்ளும்படியாக அமையவில்லை. அதேபோல், பி.சா.ஆ.18 முதல் பி.சா.ஆ.24 வரையிலான ஆவணங்கள் வழக்கு நடவடிக்கையின்போது, கொடுக்கப்பட்டதால், அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று கூறினாலும், மேற்படி ஆவணங்கள் என்ன காரணத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று விளக்கப்படாததாலும், மேற்படி ஆவணங்கள் மோசடியாக உருவாக்கப்பட்டது என்று வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்படாததாலும், வாதிகள் தரப்பில் செய்யப்பட்டுள்ள ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டு, மேற்படி ஆவணங்கள் சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**14.** வழக்கு ஆவணங்கள் அடிப்படையில் பார்க்கும்போது, தாவா சொத்தானது வாகைகுளம் கிராமம், புதிய சர்வே எண்.131/3 அ/மி ஸ்ரீ அழகுபிள்ளையார் அ/த ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்பாள் மாதாங் கோவில் கட்டிடம் மற்றும் அதனைச் சார்ந்த காலி மனை சம்பந்தப்பட்ட சொத்தைப் பொறுத்து பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**15.** மேற்படி கோவிலானது மேற்படி புதிய சர்வே எண்.131/3 ல் அமைந்துள்ளது என்பது குறித்து, மேற்படி கோவில் அமைக்கப்பட்டுள்ள இடம் அரசு புறம்போக்கு நிலம் என்றும் இருதரப்பிலும் வெளிபப்டையாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. மேலும், வா.சா.1 ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோதும், "**புல எண்.131/3 இடம் பிராது தபசில் சொத்தில் கோவில் அமைந்துள்ள இடம் என்றால் சரிதான். அந்த புல எண்.131/3 ன் அடங்கல் பதிவேட்டின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1, மேற்படி தாவா கோவில் அரசு புறம்போக்கு நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்**" என்று சாட்சியமளித்துள்ளார். மேற்படி வா.சா.1 ன் சாட்சியத்தின் மூலமாகவும், பி.வா.சா.ஆ.1 சான்றாவணத்தின் மூலமாகவும் தாவா சொத்தான கோவில் அரசு புறம்போக்கு நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

**16. மேலும், பிரதிவாதி தரப்பில் தாவா கோவில் பிரதிவாதியின் முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட கோவில் என்றும், அதில் பிரதிவாதி டிரஸ்டியாக இருந்து தாவா கோவிலை நிர்வாகம் செய்து வருகிறார் என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டிருந்தாலும்**, அதனை நிரூபிக்கும் வகையில், தாவா கோவில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதற்குண்டான எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் ஏற்பட்ட 21.12.1951 கிரைய பத்திரமான பி.சா.ஆ.8 ஆவணத்திலும், நத்தம் நிலவரித்திட்ட துய அடங்கல் பதிவேடான பி.சா.ஆ.9 ஆவணத்திலும், பிரதிவாதியின் சகோதரர் கோமதி சங்கர் என்பவர் 21.03.1970ம் தேதி நன்கொடை பெற்றதற்கான பி.சா.ஆ.25 ஆவணத்திலும் பிரதிவாதிக்கு தாவா சொத்தைப் பொறுத்து உரிமை இருப்பதாகவோ, தாவா சொத்தில் அமைந்துள்ள கோவிலில் டிரஸ்டியாக இருந்துவருவதாகவோ எந்தவொரு வாசகமும் காணப்படவில்லை என்று தெரியவருகிறது.

**17. மேலும், பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை, சாட்சியம் மற்றும் வாதத்தில், பிரதிவாதி தாவா கோவிலில் டிரஸ்டியாக இருந்து வருவதில், வாதிகளிடம் பிரச்சனை செய்து பிரதிவாதியின் பதவிக்கு இடைஞ்சல் செய்து வந்தார்கள் என்றும், இதுசம்பத்தமாக 09.02.2022ம் தேதி வாகைகுளம் கிராம நிர்வாக அலுவலரிடம் புகார் கொடுக்கப்பட்டு, அதனடிப்படையில், அம்மையப்பன் மற்றும் இராமநாதன் இந்த வழக்கில் பிரதிவாதி ஆகியோர்களிடம் தனித்தனியாக விசாரணை செய்யப்பட்டு, வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி விசாரணை அறிக்கையை தாசில்தார் அவர்கள் உத்தரவு பிறப்பிப்பதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி தாசில்தார் அவர்கள் இந்த வழக்கு வாதிகள் செய்தது தவறு என்றும், பிரதிவாதி டிரஸ்டியாக பணிபுரிவதை யாதொரு தடையும் செய்யக்கூடாது என்றும், பிரதிவாதியின் அனுமதியுடன் கோவில் திருவிழா நடத்தலாம் என்றும், பிராது தபசில் சொத்தான கோவில் இந்த வழக்கு பிரதிவாதிக்கும், பிரதிவாதியின் குடும்பத்திற்கும் மட்டும் பாத்தியப்பட்ட கோவில் என்று கூறி பிரச்சனையை முடித்துவைத்தார்கள் என்றும், அதனடிப்படையில்,**

**தாவா கோவில் பிரதிவாதி டிரஸ்டியாக இருந்து வந்துள்ளார் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது என்று பிரதிவாதி தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது.**

**18.** மேற்படி சங்கதிகளை பரிசீலனை செய்து பார்க்கும்போது, பிரதிவாதி தாவா சொத்தான கோவிலில் டிரஸ்டிாக இருந்து செயல்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால், அதனை நிரூபிக்கும் வகையில், எந்தவொரு தனிநபர் சாட்சிகளையோ அல்லது டிரஸ்டியாக இருந்து வருகிறார் என்பதற்குண்டான ஆவணங்களையோ தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.23 ஐ பரிசீலனை செய்து பார்க்கும்போது, பிரதிவாதி, வாதிகள் தாவா கோவிலை அவர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று கூறி நன்கொடை வசூலிப்பதாக அம்பாசமுத்திரம் வட்டாட்சியர் அவர்களுக்கு புகார் மனு கொடுக்கப்பட்டு, அதனடிப்படையில், கிராம நிர்வாக நிர்வாக அதிகாரியான பி.சா.1 ஐ விசாரணை செய்து, அறிக்கை சமர்ப்பித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பி.சா.ஆ.23 ஆவணமான அறிக்கையை வா.சா.2 கிராம நிர்வாக அலுவலர் தயார் செய்ததாக ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார்.

**19.** மேற்படி பி.சா.ஆ.23ன் அடிப்படையில் பார்க்கும்போது, கடந்த 11.02.2022ம் தேதி தாவா சொத்தில் அமைந்துள்ள கோவிலானது வாதிகளுக்கு பாத்தியப்பட்ட கோவில் என்று குறிப்பிட்டு, நன்கொடை நோட்டிஸ் அச்சடித்து விநியோகிக்கப்பட்டதால், அதுகுறித்து பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு, பிறகு இருவருக்கும் நடைபெற்ற சமரச பேச்சுவார்த்தையின் அடிப்படையில், தவறுதலாக செங்குந்தர் முதலியார் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட மாதங்கோவில் என அச்சடித்து விட்டதாகவும், அவ்வாறு தவறுதலாக அச்சடித்த விழா நோட்டிசை நன்கொடை விநியோகிக்காமல் வாகைக்குளம் கிராமம், ஸ்ரீ அங்காள பரமேஸ்வதி அம்மாள் திருக்கோவில் செங்குந்தர் சமுதாயம் நடத்தும் 10 நாள் திருவிழா என மறுபடியும் நோட்டிஸ் அச்சடித்து விநியோகம் செய்து செங்குந்தர் சமுதாய மக்களிடமிருந்து நன்கொடை பிரித்துக்கொள்வதாக இருதரப்பினரும் சமரச வாக்குமூலம் அளித்துள்ளதாகவும், அதனடிப்படையில் அறிக்கை சமர்ப்பித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

**20.** மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, பிரதிவாதி தரப்பில் வாதிகள் செங்குந்த முதலியார் சமுதாயத்திற்கு மட்டும் பாத்தியப்பட்ட கோவில் என்று அச்சடித்ததில் பிரச்சனை ஏற்பட்டு இருதரப்பினருக்கும் இடையே சமரம் ஏற்பட்டு, முடிக்கப்பட்டுள்ளது என்று மட்டும் தான் தெரியவருகிறது. பிரதிவாதி தரப்பு வாதத்தில் குறிப்பிடுவதுபோல், தாசில்தார் அவர்கள் இந்த வழக்கு வாதிகள் செய்தது தவறு என்றும், பிரதிவாதி டிரஸ்டியாக பணிபுரிவதை யாதொரு தடையும் செய்யக்கூடாது என்றும், பிரதிவாதியின் அனுமதியுடன் கோவில் திருவிழா நடத்தலாம் என்றும், பிராது தபசில் சொத்தான கோவில் இந்த வழக்கு பிரதிவாதிக்கும், பிரதிவாதியின் குடும்பத்திற்கும் மட்டும் பாத்தியப்பட்ட கோவில் என்று கூறி பிரச்சனையை முடித்துவைத்தார்கள் போன்ற எந்தவொரு வாசகங்கள் மேற்படி ஆவணத்தில் காணப்படவில்லை. மேற்படி விவரங்கள் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று மிகைப்படுத்தி எதிர்வழக்குரை தாக்கல் செய்து சாட்சியமளித்துள்ளார் என்று தெரியவருகிறது. பி.சா.ஆ.23 அடிப்படையில், பிரதிவாதி தாவா கோவிலுக்கு டிரஸ்டியாக செயல்பட்டு வந்தார் என்ற சங்கதிகளை பிரதிவாதி தரப்பில் நிரூபிக்கப்படவில்லை.

**21.** மேலும், பிரதிவாதியை வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது, "**தாவா கோவில் எனது சொந்த கோவில் கிடையாது என்றால் சரிதான் என்றும், அது பொது கோவில் ஆகும். ....தபசில் கோவிலுக்கு நான் அறங்காவலர் என்பதற்கு எழுத்துப்பூர்வமான ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் உள்ளது. சாட்சி மீண்டும் நானே கோவிலை நிர்வகித்து வருவதால், ஆவணம் ஏதுமில்லை என சாட்சியமளிக்கிறார். ...அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலுக்கு மின் இணைப்பு உள்ளது. அந்த மின் இணைப்பு என் பெயரிலோ, என் தகப்பனார் பெயரிலோ இல்லை என்றால் சரிதான்**." என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, தாவா கோவிலானது பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொந்த கோவில் இல்லை என்பது குறித்தும் தாவா கோவிலில் பிரதிவாதி டிரஸ்டியாக செயல்பட்டு வரவில்லை என்றும் தெரியவருகிறது.

**22.** மேற்கண்ட ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, தாவா கோவில் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியப்பட்ட கோவில் என்பது குறித்தும். பிரதிவாதி தாவா கோவிலின் டிரஸ்டியாக செயல்பட்டு வருகிறார் என்பது குறித்தும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை. எனவே, **தாவா கோவிலில் பிரதிவாதி டிரஸ்டியாக இருந்து நிர்வாகம் செய்துவரவில்லை என்று பிரதிவாதிக்கு எதிராக வழக்கெழுவினா 3ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.**

**23. இவ்வழக்கு வாதிகளான ராமநாதன் முதலியார் மற்றும் நரம்புநாதன் ஆகியோர், வழக்கில் உள்ள கோயிலின் சார்பாக வழக்கைத் தாக்கல் செய்வதற்கு சட்டப்பூர்வ தகுதி (locus standi) கொண்டுள்ளார்களா?, வாதிகள் கூறுவது போல், வழக்கு சொத்து செங்குந்தர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டதா? மற்றும் வாதிகள் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதனை பரிசீலனை செய்து பார்க்கும்போது,**

தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரம்மதேசம் கிராமத்தில் உள்ள செங்குந்தர் சமுதாயத்திற்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றும், மேற்படி கோவில் சுமார் 100 ஆண்டுகளுக்கும் மேலாக செங்குந்தர் சமுதாய மக்களால் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து அனுபவம் செய்து வரக்கூடியது என்றும், ஆரம்பத்தில் வாகைகுளம் கிராமத்தில் இருந்த செங்குந்தர் சமுதாய மக்கள் வேலைவாய்ப்பு காரணமாக அருகில் உள்ள பிரம்மதேசம் கிராமத்திற்கு இடம் பெயர்ந்தார்கள் என்றும், மற்றும் வேலைவாய்ப்பின் காரணமாக தற்போது பிரம்மதேசம், அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, அருப்புக்கோட்டை, மதுரை மற்றும் சென்னை ஆகிய இடங்களில் சுமார் 300 குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்றும், மேற்படி செங்குந்தர் சமுதாய மக்கள் வெவ்வேறு ஊர்களில் இருந்தபோதிலும், தங்களுக்கிடையே வரி பிரித்து தாவா கோவிலுக்கு செலவுகள் செய்து அபிவிருத்தி செய்து வருகிறார்கள் என்றும், கோவிலை நிர்வகிக்கும் பொருட்டு, நிர்வாக கமிட்டி உறுப்பினகளைர் தங்களுக்குள் நியமனம் செய்து கோவில் விழாக்களை நடத்தி வருகிறார்கள் என்றும், 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிர்வாக உறுப்பினர்களை தேர்வு செய்து, அவர்களில் ஒருவரை தலைவராகவும்,

பொருப்பாளராகவும் நியமிக்கப்பட்டு, கோவில் வரவு செலவு கணக்குகள் பார்த்து, கோவிலுக்கு தேவையான வசதிகளை செய்து வருகிறார்கள் என்றும், 1ம் வாதி நிர்வாக கமிட்டியின் தலைவராகவும், 2ம் வாதி நிர்வாக கமிட்டியின் உறுப்பினராகவும் இருந்து வருகிறார்கள். செங்குந்தர் சமுதாயத்தின் நிர்வாக கமிட்டியின் தலைவர் தான் தபசில் கோவிலின் டிரஸ்டியாக இருந்து கோவில் காரியங்களை செய்து வருவது வழக்கமாக இருந்து வருகிறது என்றும், அதுசம்பந்தமாக செங்குந்தர் சமுதாய வரிதார்கள் கூட்டம் போட்டு தீர்மானம் இயற்றியுள்ளார்கள் என்று குறிப்பிட்டு விவாதம் செய்யப்பட்டது.

**24**. மேற்படி விவாத்தினை பரிசீலனை செய்து பார்க்கும்போது, வாதிகள் தரப்பில் தாவா கோவிலானது 100 ஆண்டுகளுக்கு முன் செங்குந்தர் சமுதாய மக்களால் ஸ்தாபிக்கப்பட்டது என்று சொல்லியுள்ளபோதிலும், அதற்குண்டான எந்தவொரு ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. அதேபோல், மேற்படி கோவில் யாருடைய காலகட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டது என்பது போன்ற எந்தவொரு விபரங்களும் வெளிப்படுத்தப்படவில்லை.

**25.** மேலும், வா.சா.1ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது, “**தாவா கோவில் செங்குந்தர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட கோவில் என்பதைக் காட்ட பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. தாவா கோவில் செங்குந்தர் சமுதாய மக்களால் ஸ்தாபிக்கப்பட்டது என்பதைக் காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். கோபுரம் கட்டியதற்கும், மண்டபம் கட்டியதற்கும் நான் போட்டோக்களை தாக்கல் செய்துள்ளேன். 9 ஆவணங்களை தவிர ஏதுமில்லை. மேற்படி ஆவணங்களைப் பார்த்தால்தான் தாவா கோவில் செங்குந்தர் சமுதாய மக்களால் ஸ்தாபிக்கப்பட்டது என்பது தெரியவரும் என்றால் சரிதான்**" என்று சாட்சியமளித்துள்ளார்.

**26.** அதேபோல், வா.சா.2 ஐயப்பன் என்பவருடைய சாட்சியத்தில், "**தாவா சொத்து செங்குந்தர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது என எந்த ஆதாரத்தை வைத்து சொல்லியுள்ளேன் என்றால் ஆதாரங்களைக் கொடுத்துள்ளோம். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆதாரங்களைத் தவிர வேறு ஆதாரம் ஏதுமில்லை ஆரம்ப**

**காலத்தில் வாகைகுளம் கிராமத்தில் செங்குந்தர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் யார் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது.... பொதுவாக ஒரு கோவில் பன்னெடுங்காலமாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது என்றால் அதுவகைக்கு சமுதாயத்தில் ஆவணங்கள் வைத்திருப்பார்கள் என்றால் சரிதான். அதுபோன்ற ஆவணம் எங்கள் சமுதாயத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது என்பதைக் காட்ட ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.... வாகைகுளம் கிராமத்தில் உள்ள தபசில் கோவில் எப்போது ஸ்தாபிக்கப்பட்டது, யாரால் ஸ்தாபிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்**. ..” என்று சாட்சியமளித்துள்ளார்.

**27.** மேற்படி சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, தாவா கோவில் செங்குந்தர் சமுதாயத்தினரால் ஸ்தாபிக்கப்பட்டது என்பது குறித்தும், எப்போது உருவாக்கப்பட்டது, யாரால் உருவாக்கப்பட்டது என்பதனை நிரூபிக்கும் வகையில், வாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்று தெரியவருகிறது.

**28.** மேலும், வாதிகள் தரப்பு வாதத்தில், ஆரம்பத்தில் வாகைகுளம் கிராமத்தில் இருந்த செங்குந்தர் சமுதாய மக்கள் வேலைவாய்ப்பு காரணமாக அருகில் உள்ள பிரம்மதேசம் கிராமத்திற்கு இடம் பெயர்ந்தார்கள் என்றும், மற்றும் வேலைவாய்ப்பின் காரணமாக தற்போது பிரம்மதேசம், அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, அருப்புக்கோட்டை, மதுரை மற்றும் சென்னை ஆகிய இடங்களில் சுமார் 300 குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்றும், மேற்படி செங்குந்தர் சமுதாய மக்கள் வெவ்வேறு ஊர்களில் இருந்தபோதிலும், தங்களுக்கிடையே வரி பிரித்து தாவா கோவிலுக்கு செலவுகள் செய்து அபிவிருத்தி செய்து வருகிறார்கள் என்று விவாதம் செய்யப்பட்டது.

**29.** மேற்படி விவாத்தினை பரிசீலனை செய்து பார்க்கும்போது, தாவா சொத்தானது வாகைகுளம் கிராமத்தில் அமைந்துள்ளது என்று தெரியவருகிறது. வாதிகள் தரப்பில் பிராது தபசில் கோவில் பிரம்மதேசம் கிராமத்தில் உள்ள செங்குந்தர் சமுதாயத்திற்கு மட்டும் பாத்தியப்படட கோவில் என்று குறிப்பிட்டுள்ளார்.

**30.** வா.சா.1 ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது, "**தாவா கோவில் வாகைகுளம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் பிரம்மதேசம் கிராமத்தைச் சேர்ந்தவர் என்றால் ஆமாம். வாகைகுளம் கிராமத்தில் செங்குதர் சமுதாய மக்கள் கிடையாது என்றால் சரிதான். முன்பு இருந்தார்கள். செங்குந்தர் சமுதாய மக்கள் வாகைகுளம் கிராமத்தில் முன்பு இருந்தார்கள் என்பதைக் காட்ட ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் ஆவணம் எதுவும் இல்லை. வாகைகுளம் கிராமத்தில் 300 செங்குந்தர் சமுதாய மக்கள் இருக்கிறார்களா என்றால் அனைவரும் வெளியூரில் இருக்கிறார்கள்**" என்று சாட்சியமளித்துள்ளார்.

**31.** அதேபோல், வா.சா.1 சாட்சியத்தில் **ஆரம்ப காலத்தில் வாகைகுளம் கிராமத்தில் செங்குந்தர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் யார் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. தற்போது வாகைகுளம் கிராமத்தில் செங்குந்தர் சமுதாயத்தை சார்ந்தவர்கள் உள்ளார்களா என்றால் இல்லை. செங்குந்தர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் வெளியூர்களில் குடியிருந்து வருவது யார் யார், 300 வரிதாரர்கள் யார் யார் என்பதைக் காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.**" என்று சாட்சியமளித்துள்ளர்.

**32.** மேற்படி சாட்சியத்தினை பரிசீலனை செய்துபார்க்கும் போது, வாகைகுளம் கிராமத்தில் செங்குந்தர் சமுதாய மக்கள் தற்போது யார்ரும் வசித்து வரவில்லை என்று வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சியத்தின் மூலம் தெரியவருகிறது. ஆரம்பத்தில் செங்குந்தர் சமுதாய மக்கள் வாகைகுளம் வசித்து வந்து, செங்குந்தர் சமுதாய மக்களால் கோவில் கட்டப்பட்டு, பராமரிக்கப்பட்டு வந்தது என்று சொல்லியுள்ள போதிலும், அதனை நிரூபிக்கும் வகையில், செங்குந்தர் சமுதாய மக்கள் வாகைகுளத்தில் ஆரம்பத்தில் வசித்து வந்தார்கள் என்பதனை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**33.** அதேபோல், வாகைகுளத்தில் வசித்து வந்த செங்குந்தர் சமுதாய மக்கள் சுமார் 300 குடும்பங்கள் பிரம்மதேசம், அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, அருப்புக்கோட்டை, மதுரை மற்றும் சென்னை ஆகிய பகுதிகளில் வாழ்ந்து வருகிறார்கள் என்றும்,

அவர்களிடம் வரி பெறப்பட்டு, தாவா கோவில் பராமரிக்கப்பட்டு, வருகிறது என்றும், தாவா கோவிலுக்கு 300 குடும்பங்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டுள்ளதாக சொல்லியுள்ள நிலையில், அதனை நிரூபிக்கும் வகையில், 300 குடும்பங்கள் தாவா கோவில் மற்றும் தாவா கோவில் பராமரிப்பிற்கக வரி செலுத்தி வந்தார்கள் என்பதனை காட்டுவதற்கு 300 குடும்பங்களின் வரிதாரர்களின் பெயர் விவரங்கள் குறிப்பிட்டு, எந்தவொரு ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. 300 குடும்பங்களிடம் தாவா கோவிலுக்கு வரி எவ்வளவு பெறப்பட்டது, எப்போது பெறப்பட்டது என்பதற்குண்டான ஆவணங்கள் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்று தெரியவருகிறது.

**34**. தாவா சொத்தில் அமைந்துள்ள கோவிலானது செங்குந்தர் சமுதாய மக்களுக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டது என்றும், மற்ற சமூகத்திற்கு எந்தவொரு பாத்தியமும் இல்லை என்றும், மற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அந்த கோவிலில் வழிபடவோ, கோவில் நிர்வாகத்தில் பங்கேற்கவோ உரிமை எதுவும் இல்லை என்பதனை வாதிகள் தரப்பில்தான் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும். ஆனால், இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள கோவிலானது செங்குந்தர் சமுதாய மக்களுக்கு மட்டும் பாத்தியப்பட்ட கோவில் என்பதனை காட்டுவதற்கு எந்தவொரு பதிவு ஆவணங்களோ, பழமையான ஆவணங்களோ எதுவும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. வாதிகள் வழக்கில் கூறியுள்ளதுபோல், கோவில் நிறுவப்பட்ட காலத்திலிருந்தே அதன் கோவிலின் வழிபாடு மற்றும் கோவில் பராமரிப்பு வாதிகள் சமுதாயத்திற்கு மட்டுமே ஒப்படைக்கப்பட்டிருந்தது என்பதனை நிரூபிக்கும் வகையில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்று தெரியவருகிறது.

**35**. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வாதத்தில் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிர்வாக கமிட்டி உறுப்பினர்களை தேர்வு செய்து, அவர்களின் ஒருவரை தலைவராகவும், கோவில் பொறுப்பாளராகவும் நியமனம் செய்து வரவு செலவு பார்க்கப்படும் என்றும், 1ம் வாதி நிர்வாக கமிட்டியின் தலைவராகவும், 2ம் வாதி நிர்வாக கமிட்டியின் உறுப்பினராக இருந்து வருகிறார்கள் என்றும், செங்குந்தர் சமுதாய நிர்வாக கமிட்டியின் தலைவர்தான் கோவில் டிரஸ்டியாக இருந்து கோவில் காரியங்களை செய்து வருவார் என்றும், அதுசம்பந்தமாக செங்குந்தர்

சமுதாய வரிதாரர்கள் கூட்டம் போட்டு தீர்மானம் இயற்றியுள்ளார்கள் என்றும், அது வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும், தாவா கோவிலின் நிர்வாகம் வாதிகளிடம் உள்ளது என்பதற்கு ஆதரவாக மின் கட்டண ரசீது, கொடிமரம் தேக்குமரத்தில் வாங்குவதற்கு வனத்துறையிடம் அனுமதி வாங்கியதற்கான கடிதம், தாவா கோவிலின் கும்பாபிஷேகம் நடைபெற்றதற்கான அழைப்பிதழ்கள் மற்றும் புகைப்படம் மற்றும் கல்வெட்டுகள் ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் வாதிகளால் தான் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறார்கள் என்று தெரியவரும் என்று வாதம் செய்யப்பட்டது.

**36.** மேற்படி வாதத்தினை பரிசீலனை செய்து பார்க்கும்போது, செங்குந்தர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட கோவிலானது சுமார் 100 ஆண்டுகளுக்கும் மேலாக ஸ்தாபிக்கப்பட்டு, அனுபவம் செய்து வரப்படுகிறது என்று சொல்லியுள்ள சூழ்நிலையில், வாதிகள் தரப்பில் 2010 முதல் 2019ம் ஆண்டுகளில் இருந்து கூட்டம் நடைபெற்ற நிகழ்வுகளை மட்டும் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2, வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது, தாவா கோவிலின் அனுபவம் வாதிகள் வசம்தான் உள்ளது என்றும், தாவா கோவில் பராமரிப்பு, நிர்வாகம் ஆகிய அனைத்தும் வாதிகள் தரப்பில்தான் செய்யப்பட்டு வருகிறது என்று தெரியவருகிறது. அந்த வகையில், வாதிகள் தரப்பில் இந்த வழக்கினை பிரதிவாதி மீது தாக்கல் செய்வதற்கு சட்டப்படியான அதிகாரம் இல்லை என்று பிரதிவாதி தரப்பில் வாதம் செய்யப்பட்டாலும், அது ஏற்றுக்கொள்ளும்படியாக அமையவில்லை. வாதிகள், தாவா கோவில் சம்பந்தமாக நிர்வாகம் மற்றும் பராமரிப்பு வாதிகள் வசம் உள்ளதால், பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்வதற்கு சட்டப்படியான அதிகாரம் உள்ளது என்று தெரியவருகிறது.

**37.** இருந்ததபோதிலும், வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில், செங்குந்தர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களால் நிறைவேற்றப்பட்டதாக கூறப்படும் சில எழுத்துபூர்வமான தீர்மானங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் பரிகாரம் கோரியுள்ள நிலையில், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களில்

குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்களை கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும்போது, ஒரு சமூகத்தினர் தங்களது உள் நிர்வாகம் தொடர்பாக தீர்மானங்களை நிறைவேற்றுவது சாத்தியமானதாக இருந்தாலும், அந்த கோவிலின் பிரத்தியோகமான உரிமையை உருவாக்குவதற்கோ அல்லது அறிவிக்கவோ வாதிகளுக்கு சட்டப்பூர்வமான அதிகாரம் இருந்தது என்பதை நிரூபிக்கப்படாத நிலையில், மேற்படி தீர்மானங்களை மட்டும் வைத்துக்கொண்டு தாவா சொத்தில் உரிமையை உருவாக்கவோ அல்லது தாவா சொத்தான கோவில் வாதிகளின் சமுதாயத்திற்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று மாற்ற முடியாது என்று தெரியவருகிறது.

**38.** மேலும், மேற்படி வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் தீர்மானங்களை நிறைவேற்றிய நபர்களுக்கு வழக்கு சொத்தான கோவில் வாதிகள் சமுதாயத்திற்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று கூறும் அதிகாரம் வாதிகளுக்கு எந்த ஆவணங்களின் அடிப்படையில், எதனடிப்படையில் கிடைத்தது என்பதனை ஏற்றுக்கொள்ளும் வகையில் ஆவணங்கள் மூலம் வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. வாதிகள் தரப்பில் தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்பட்ட தீர்மானங்களை மட்டும் அடிப்படையாக வைத்துக்கொண்டு தாவா சொத்தானது வாதிகள் சமுதாயத்திற்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று தீர்வு காண இயலாது என்று தெரியவருகிறது.

**39.** பிரதிவாதி தரப்பு வாதத்தில், தாவா சொத்தில் அமைந்துள்ள கோவிலானது செங்குந்தர் சமுதாயத்தைச் சேர்ந்த நபர்களுக்கு பாத்தியப்பட்ட கோவில் இல்லை என்றும், பிராது தபசில் கோவிலில் கடந்த 05.07.1965 ல் அங்காள ஈஸ்வரி மற்றும் ஸ்ரீ அழகுபிள்ளையார் கோவிலில் நடைபெற்ற அஷ்டபந்தன கும்பாபிஷேக அழைப்பிதழ் S.கணபதியா பிள்ளை, டிரஸ்டி, வாகைகுளம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி கணபதியா பிள்ளை பிரதிவாதி தந்தை ஆவார் என்றும், மேற்படி கணபதியா பிள்ளை மறைவிற்கு பின்பு வழக்கின் பிரதிவாதி டிரஸ்டி ஸ்தானத்தில் இருந்து கோவிலை கவனித்து வருகிறார் என்றும், கோவிலின் ஒரு சாவி பிரதிவாதியிடமும், மற்றொரு சாவி பூசாரி வசமும் இருந்தது என்றும், மேற்படி கோவிலை வாதிகள் உரிமை கொண்டாடியதால், அதுசம்பந்தமாக, கடந்த 09.02.2022 ம் தேதி வாகைகுளம் வி.ஏ,ஓ

விடம் புகார் கொடுக்கப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு, பிரதிவாதியை டிரஸ்டியாக பணிபுரிவதை யாரும் தடை செய்யக்கூடாது என்றும் கூறி பிரச்சனையை சமாதானமாக முடித்து கைத்தார்கள் என்றும், மேலும், கோவிலை வாதிகள் அபகரிக்க வேண்டுமென்றும், கோவிலுக்குள் பிரதிவாதி நுழையக்கூடாத வகையில், மேல்பூட்டு போட்டு பூட்டினார்கள் என்றும், இது சம்பந்தமாக கடந்த 08.08.2022ம் தேதி அம்பாசமுத்திரம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு, அதனடிப்படையில் விசாரணை செய்யப்பட்டு வாதிகளை எச்சரித்து அனுப்பினார்கள் என்றும், வாதிகள் கோவிலை ஆக்கிரமிப்பு செய்ய சட்டவிரோதமாக முயற்சி செய்ததால், அவர்கள் மீது புகார் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வாதிகள் வழக்கில் குறிப்பிடுவது போல், தபசிலில் குறிப்பிடப்பட்டுள்ள கோவில் வாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்ட கோவில் இல்லை என்றும், அது பொதுக் கோவில் என்றும், அதற்கு ஆதரவாக, பிரதிவாதியின் தகப்பனார் தபசிலில் குறிப்பிடப்பட்டுள்ள கோவிலுக்கு கடந்த 05.07.1965ம் வருடம் டிரஸ்டியாக இருந்தார் என்பதற்கு ஆதரவாக பி.சா.ஆ.2 ஆவணமும், வாதிகள் கோவிலில் பூட்டு போட்டதால், அதனை அகற்றக்கோரி கடந்த 08.08.2022ம் தேதி அம்பாசமுத்திரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக புகார் மனு ரசீது பி.சா.ஆ.3 ஆவணமும், பிரம்மதேசத்தில் உள்ள அங்காள பரமேஸ்வரி கோவிலில் நடைபெற்ற வருஷாபிசேக விழா மற்றும் மகா சிவராத்திரி அழைப்பிதழ் பி.சா.ஆ.4 ஆவணமும், தபசில் கோவில் அனைவருக்கும் பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதரவாக 1998ம் வருடம் நடைபெற்ற கும்பாபிசேக அழைப்பிதழை பி.சா.ஆ.5 ஆவணமும், வாதிகள் சட்டவிரோதமாக கோவிலை அபகரிக்க முயல்வதாக வாதிகள் மீது புகார் கொடுத்தது சம்பந்தமாக பி.சா.ஆ.6 மற்றும் பி.சா.ஆ.7, பி.சா.ஆ.11 முதல் பி.சா.ஆ.24 வரையிலான ஆவணங்களும் தாக்கல் செய்துள்ளார்.

**40**. வாதிகள் தரப்பு வழக்கில் தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கோவிலானது பிரம்மதேசம் கிராமத்தில் உள்ள செங்குந்தர் சமுதாயத்தினருக்கு மட்டும் பாத்தியப்பட்ட கோவில் என்றும், வேறு சமூகத்தினருக்கு தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கோவிலில் எந்த உரிமையும் இல்லை என்றும், செங்குந்தர் சமுதாயத்தினரால் மட்டுமே கோவிலின் டிரஸ்டியாக இருந்து கோவிலுக்குண்டான பணிகள் செய்து வரப்படுகிறது என்று சொல்லியுள்ள போதிலும், பி.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்து

பார்க்கும்போது, கடந்த 05.07.1965ம் வருடம் நடைபெற்ற அம்பாசமுத்திரம் தாலுகா, வாகைகுளம் ஸ்ரீ அங்காள ஈஸ்வரி, ஸ்ரீ அழகுபிள்ளையார் அஷ்டபந்தன கும்பாபிஷேக நிகழ்வு அழைப்பிதழில் பிரதிவாதியின் தகப்பனாரான S.கபணபதியா பிள்ளை டிரஸ்டியாக இருந்துள்ளார் என்று தெரியவருகிறது. மேற்படி கும்பாபிஷேக அழைப்பிதழ் தாவா கோவிலுக்கு 1965ம் ஆண்டு நடைபெற்ற அழைப்பிதழ் என்பதனை வாதிகள் தரப்பில் ஒப்புக்கொண்டதன் அடிப்படையில், வா.சா.1 மூலமாக பி.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.1ன் சாட்சியத்திலே பி.சா.ஆ.2ல் கண்டுள்ள கணபதியாபிள்ளை என்பவர் பிரதிவாதியின் தகப்பனார் என்றால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளார்.

**41.** மேற்படி சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கோவிலில் மாற்று சமுகத்தைச் சேர்ந்த பிரதிவாதியின் தகப்பனார் டிரஸ்டியாக செயல்பட்டு வந்துள்ளார் என்று தெரியவருகிறது.

**42.** அதேபோல், வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.2 சாட்சியான ஐயப்பன் என்பவரை பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது, "**என்னிடம் காட்டப்படும் ஆவணம் பிரம்மதேசம் ஊரில் உள்ள அங்காள பரமேஸ்வரி திருக்கோவில் சம்பந்தப்பட்ட அழைப்பிதழ் என்றால் சரிதான். அது பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ... என்னிடம் காட்டப்படும் ஆவணம் தாவா கோவிலுக்கு அச்சடிக்கப்பட்ட கும்பாபிஷேக அழைப்பிதழ் என்றால் சரிதான். அது பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**" என்று சாட்சியமளித்துள்ளர்.

**43.** மேறப்டி பி.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, தாவா வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள கோவிலானது செங்குந்த முதலியார் சமுதாயத்திற்கு மட்டும் பாத்தியப்பட்ட கோவில் என்று குறிப்பிட்டு, கடந்த 06.07.1998ம் நடைபெற்ற கும்பாபிஷேக அழைப்பிதழில் குறிப்பிடப்படவில்லை. வாகைகுளம் கிராமத்திற்கு பாத்தியப்பட்ட கோவில் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. ஆனால், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.4, வா.சா.ஆ.5 ஆவணங்களில் 2000, 2004, 2019, 2020, 2021, 2022 சிவராத்திரி அழைப்பிதழிலும், 2018ம்

வருடம் நடைபெற்ற கும்பாபிஷேச அழைப்பிதழில் மட்டும் செங்குந்தர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட கோவில் என்று பின்னிட்டு குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

**44**. மேற்படி பி.சா.ஆ.2 மற்றும் பி.சா.ஆ.5 ஆவணங்களின் அடிப்படையில் பார்க்கும்போது, தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கோவிலானது செங்குந்தர் முதலியார் சமுதாயத்தினருக்கு மட்டும் பாத்தியப்பட்ட கோவில் என்று தெரியவரவில்லை. தாவா கோவிலில் பிரதிவாதியின் தகப்பனார் S.கணபதியா பிள்ளை டிரஷ்டியாக செயல்பட்டு வந்துள்ளார் என்பது குறித்தும், 1998ம் வருடம் வாகைகுளம் கிராம மக்கள் அனைவரும் பொதுக்கோவில் என்ற நிலையில், கும்பாபிஷேகம் செய்துள்ளார்கள் என்று பிரதிவாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் கூறுவது போல், தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கோவிலானது சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாக செங்குந்தர் முதலியார் சமுதாயத்தினரால் ஸ்தாபிக்கப்பட்டு அவர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வரப்படும் கோவில் என்பதை நிரூபிக்கப்படவில்லை.

**45.** வாதிகள் தரப்பில், பிரதிவாதி சரியான பூஜைகள் செய்வது கிடையாது என்றும், ஆகமவிதிகளை கடைபிடிக்கவில்லை என்றும், தேவையில்லாமல் பேச ஆரம்பித்தார் என்றும், சிவராத்திரி மற்றும் பங்குனி உத்தரம் நாட்களில் வரிதாரர்கள் கோவிலில் தங்கியிருக்கும்போது, பிரதிவாதி சில நபர்களை துணைக்கு அழைத்துக்கொண்டு இடைஞ்சல் செய்ய ஆரம்பித்தார் என்றும் சொல்லியுள்ள நிலையில், மேற்படி சம்பவம் எப்போது நடைபெற்றது, எந்த தேதி, மாதம், வருடத்தில் நடைபெற்றது என்பதற்குண்டான விளக்கங்கள் பிராதில் தெளிவுபடுத்தப்படவில்லை.

**46**. மேலும், 08.08.2022ம் தேதி வாதிகள் கோவிலில் அர்ச்சகர் கோவிலில் பூஜை செய்துகொண்டிருந்தபோது, அதனை தடுத்து வழிபடக்கூடாது என்று வெளிப்படையாக மிரட்டினார் என்றும், கோவில் பட்டர் வாதிகளுக்கு தகவல் சொல்லி வாதிகள் நேரடியாக வந்து பிரதிவாதியை சத்தம் போட்டு அனுப்பினார்கள் என்றும், வாதிகளிடம் பிரதிவாதி தனக்கு அர்ச்சகர் பணி தராவிட்டால், யாரையும் கோவிலுக்குள் விடமாட்டேன்

என்று மிரட்டினார் என்றும், கடந்த 13.08.2022ம் தேதி காலையில் கோவிலுக்கு வந்த நபர்களிடம் பிரதிவாதி பிரச்சனை செய்தார் என்றும், பிரதிவாதி அர்ச்சகர் பணியை கைப்பற்றும் எண்ணத்தில் பல்வேறு இடையூறு செய்து வருகிறார் என்றும், அதனால், பிரதிவாதிக்கு எதிராக உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரப்பட்டுள்ளது.

**47.** மேற்படி சங்கதிகளைப் பரிசீலனை செய்து பார்க்கும்போது, கோவில் அர்ச்சகரையோ அல்லது கோவிலுக்கு வந்த நபர்களை மிரட்டினார் என்பது சம்பந்தமாக வாதிகள் தரப்பில் எந்தவொரு புகாரும் கொடுக்கப்படவில்லை. வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.3 சாட்சியத்திலும் பிரதிவாதி கோவிலில் வழிபாடு செய்யவிடாமல் தன்னை தடுத்து இடைஞ்சல் செய்ததாகவோ எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், வாதிகள் தரப்பு வழக்கிற்கு மாறாக, பிரதிவாதி தான் பிராது தபசில் சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கோவிலின் பூட்டை மாற்றி வேறு பூட்டு வாதிகள் போட்டுவிட்டார்கள் என்று கடந்த 08.08.2022ம் தேதியில் அம்பாசமுத்திரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்று பி.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. மேலும், பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்குவிசாரணை செய்தபோது, **"இவ்வழக்கு பிரதிவாதி 08.08.2022ம் தேதி அம்பாசமுத்திரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை நடைபெற்றது"** என்று ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, வாதிகள் குறிப்பிடுவதுபோல், 08.08.2022ம் தேதி நடைபெற்றதாக சொல்லப்படும் சம்பவம் உண்மையல்ல என்றும், அது வழக்கிற்காக உருவாக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது.

**48**. அதேபோல், வாதிகள் தரப்பில் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரப்பட்டிருந்தாலும், வாதிகள் பி.சா.1ஐ குறுக்குவிசாரணை செய்யும்போது, **"தாவா கோவிலில் இன்றும் பூசாரி மூலம் தினசரி பூஜைகள் செய்யப்பட்டு வரப்படுகிறது என்றால் சரிதான். நானும் கோவிலுக்கு சாமி கும்பிட சென்றுவருகிறேன். செங்குந்தர் சமுதாய மக்களும் கோவிலில் வழிபாடு செய்து வருகிறார்கள்"** என்று சாட்சியமளித்துள்ளார்.

49. அதேபோல், பி.சா.2 ஐ வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது, **"வாகைகுளம் கிராமத்தில் எந்த வருடம் முதல் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன் என்றால் 2020 ஆகஸ்ட் மாதம் முதல் 2022 ஆகஸ்ட் மாதம் வரை பணிபுரிந்தேன். நான் பணியாற்றும் காலத்தில் செங்குந்தர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட கோவிலில் சிவராத்திரி விழா நடைபெற்றது என்றால் சரிதான். செங்குந்தர் கோவில் என்பதை பிரதிவாதி ஆட்சேபனை செய்து வருகிறார் என்றால் ஆட்சேபனை செய்து வருகிறார். நான் பணியாற்றிய காலத்தில் விழாக்கள் நடைபெற்று வந்ததால் என்றால் சரிதான். சட்ட ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்படவில்லை. பிரதிவாதி அவ்வப்போது, அரசு அதிகாரிகளுக்கு மனு அனுப்பிக்கொண்டே இருப்பார் என்றால் சரிதான் "** என்று சாட்சியமளித்துள்ளார்.

50. மேற்படி சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, பிரதிவாதி, இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகும் கூட தற்போது வரை தாவா சொத்தான கோவிலுக்கு சென்று எந்தவொரு பிரச்சனையும் இல்லாமல் வழிபாடு செய்து வருகிறார் என்று தெரியவருகிறது. வாதிகள் வழக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் பிரதிவாதி, வாதிகளுக்கு எதிராக இடையூறு மற்றும் சட்ட ஒழுங்கை குலைக்கும் வகையில், பிரதிவாதி செயல்பட்டு வந்தார் என்பதைப் பொறுத்தும், வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. அந்த வகையில், வாதிகள் கோரிய உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்குவதற்கு இந்த வழக்கில் முகாந்திரம் இல்லை என்று தீர்வு காண்கிறது.

51. மேற்கண்ட சங்கதிகளின் அடிப்படையில், வாதிகள் தாவா சொத்தில் உள்ள கோவில் அனுபவத்தில் இருந்து, தாவா சொத்து சம்பந்தமாக பராமரிப்பு மற்றும் நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்று வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதால், **வாதிகள் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்வதற்கு சட்டப்படியான உரிமை உள்ளது என்று வழக்கெழுவினா 1ற்கும், தாவா கோவிலானது செங்குந்தர் முதலியார் சமுதாயத்திற்கு மட்டும் பாத்தியப்படட கோவில் என்பது குறித்து வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று வழக்கெழுவினா 2ற்கும்,** பிரதிவாதி, கோவில்

நிர்வாகத்தில் வாதிகளுக்கு எதிராக இடையூறு மற்றும் சட்ட ஒழுங்கை குலைக்கும் வகையில், செயல்பட்டு வந்தார் என்பதைப் பொறுத்தும், வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்படாததால், **வாதிகள் கோரியுள்ள உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று வழக்கெழுவினா 4 ற்கும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.**

52. <u>கூடுதல் எழுவினா – 1</u>

| | |
|---|---|
| 1. | **தாவா சொத்தான கோவிலைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல், நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள வாதிகளின் இந்த தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கதா?** |

**தாவா சொத்தான கோவிலைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல், நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள வாதிகளின் இந்த தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கதா? என்பதனை பரிசீலனை செய்து பார்க்கும்போது,**

வாதிகள் தரப்பில் தாவா சொத்து அமைந்துள்ள கோவில் வாதிகள் சமுதாயமான செங்குந்த முதலியார் சமுதாயத்திற்கு மட்டும் பாத்தியப்பட்ட கோவில் என்று பிரதிவாதிக்கு எதிராக உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியுள்ளார்கள். பிரதிவாதி தரப்பில் தாவா சொத்தான கோவில் பிரதிவாதியின் குடும்ப கோவில் என்றும், அது பிரதிவாதியின் மூதாதையர்களால் நிறுவப்பட்டு, பிரதிவாதியின் தகப்பனார் டிரஸ்டியாக செயல்பட்டும், அதன்பிறகு, பிரதிவாதி டிரஸ்டியாக இருந்து கோவிலை பராமரித்து வருகிறார் என்றும், பிரதிவாதியின் அனுமதியின் பேரில் அனைத்து சமூகத்தினரும் தாவா சொத்தான கோவிலில் வழிபாடு செய்து வருகிறார்கள் என்றும், தாவா சொத்தான கோவில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றும், தங்களுக்கே பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிட்டு வாதிகளின் உரிமைமூலத்தை மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

**53.** இந்த வழக்கில் தாவா சொத்து வாதிகள் மற்றும் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்து என்று உரிமை கொண்டாடிவரும் நிலையில், வாதிகள் தரப்பில் பிராது தபசில் சொத்து வாதிக்கு சட்டப்படி பாத்தியப்பட்டுள்ளது என்பது குறித்தும், சட்டப்படி உரிமைமூல ஆவணங்களின் அடிப்படையில் வாதிகளுக்கு தாவா சொத்தைப் பொறுத்து சட்டப்படியான உரிமைமூலம் உள்ளது என்பதனை காண்பிப்பதற்கு வேறு வருவாய்துறை ஆவணங்கள் எதுவும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

**54.** வழக்கு சொத்தின் சட்டப்படியான உரிமை சம்பந்தமாக இருவருக்கும் இடையே பிரச்சனை உள்ள நிலையில், எதிர்வழக்குரையில் பிராது சொத்தானது பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லியுள்ள நிலையில், வாதிகள் விளம்புகை பரிகாரம் கோரி சட்டப்படி வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும். ஆனால், வாதிகள் தரப்பில் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்று தெரியவருகிறது.

**55.** ஒரு வழக்கில் எப்போது விளம்புகை பரிகாரம் கோரப்பட வேண்டும் என்பது சம்பந்தமாக மாண்புமிகு உச்சநீதிமன்றம் கீழ்க்கண்ட முன்தீர்ப்பில்,

**"Anathula Sudhakar Vs P.Buchi Reddy ( Dead) By Lrs & Ors on 25 March, 2008"**

> To Summarize, the position in regard to suits for prohibitory injunction relating to immovable property, is as under:
>
> a) Where a cloud is raised over plaintiffs title and he does not have possession, a suit for declaration and possession, with or without a consequential injunction, is the remedy. Where the plaintiff's title is not in dispute or under a cloud, but he is out of possession, he has to sue for possession with a consequential injunction. Where there is merely an interference with plaintiff, lawful possession or threat of dispossession, it is sufficient to sue for an injunction simpliciter.
>
> b) As a suit for injunction simpliciter is concerned only with possession, normally the issue of title will not be directly, and substantially in issue. The prayer for injunction will be decided with reference to the finding on possession. But in cases where de jure possession has to be established on the basis of title to the property, as in the case of vacant sites. the issue of title may directly and substantially arise for consideration, as without a finding thereon, it will not be possible to decide the issue of possession.

c) But a finding on title cannot be recorded in a suit for injunction, unless there are necessary pleadings and appropriate issue regarding title ( either specific, or implied as noticed in Annaimuthu Thevar (supra)). Where the avderments regarding title are absent in a plaint and where there is no issue relating to title, the court will not investigate or examine or render a finding on a question of title in a suit for injunction. Even where there are necessary pleadings and issue, if the matter involvers complicated questions of fact and law relating to title, the court will relegate the parties to the remedy by way of comprehensive suit for declaration of title, instead of deciding the issue in a suit for mere injunction.

d) Where there are necessary pleadings regarding title, and appropriate issue relating to title on which parties lead evidence, if the matter involved is simple and straight–forward, the court may decide upon the issue regarding title, even in a suit for injunction. But such cases, are the exception to the normal rule that question of title will not be decided in suits for injunction. But persons having clear title and possession suing for injunction, should not be drivern tot he costlier and more cumbersome remedy of a suit for declaration, merely because some meddler vexatiously or wrongly makes a claim or tries to encroach upon his property. The court should use its discretion carefully to identify cases where it will enquire into title and cases where it will refer to plaintiff to a more comprehensive declaratory suit, depending upon the facts of the case.

தெளிவாக எடுத்துரைத்துள்ளது.

**56**. மேற்படி முன்தீர்ப்பினை பரிசீலித்து, இவ்வழக்கு சங்கதிகளை பார்வையிடும்போது, இந்த வழக்கிலும் தாவா சொத்து தொடர்பாக உரிமைமூலப் பிரச்சனை வாதிகள் மற்றும் பிரதிவாதிக்கு இடையே இருப்பது தெரியவருகிறது. அந்த வகையில், வாதிகள் தரப்பில் தாவா சொத்தினைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று தெரியவருகிறது.

**57**. மேற்கண்ட சங்கதிகளின் அடிப்படையில், பிரதிவாதி, வாதிகளின் உரிமைமூலத்தினை மறுத்து எதிர்வாதம் செய்தும், அதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ள நிலையிலும், வாதிகள் மற்றும் பிரதிவாதிக்கு இடையே சொத்து உரிமை சம்பந்தமாக பிரச்சனை இருந்து வரும் நிலையிலும், **வாதிகள் தரப்பில் விளம்புகை பரிகாரம் கோராமல் தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர**

**தடையுறுத்துக்கட்டளைப் பரிகாரம் மட்டும் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று கூடுதல் வழக்கெழுவினா 1ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.**

**<u>எழுவினா 5ற்கான தீர்வு</u> :-**

| | |
|---|---|
| **5.** | **To what other relief the Plaintiffs are entitled?** |

**58.** வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு எதிராக தீர்மானிக்கப்பட்டுள்ளதால், வாதிகளுக்கு வேற எந்த பரிகாரமும், செலவுத்தொகை உட்பட கிடைக்கத்தக்கதல்ல என இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக, இவ்வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRAVEENJEEVA P

Uploaded on 20.08.2026
Digitally signed by PRAVEENJEEVA P
Date: 2026.08.20 19:26:50 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ.)
அம்பாசமுத்திரம்.

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u> :-**

வா.சா. 1 – திரு. நாரம்புநாதன் (2ம் வாதி)

வா.சா. 2 – திரு. ஐயப்பன்

வா.சா. 3 – திரு. அரிகிருஷ்ணன்

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ. 1 | – | வாதி கோவில் சம்பந்தப்பட்ட மினிட் புத்தகம் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ. 2 | – | வாதி கோவில் வரவு செலவு விபரங்கள் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ. 3 | – | தாவா கோவிலுக்கான நத்தம் அடங்கல் பதிவேட்டின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ. 4 | – | வாதி கோவிலுக்கான சிவராத்திரி விழா அழைப்பிதழ்கள் (6 எண்ணம்) |
| வா.சா.ஆ. 5 | – | வாதி கோவிலுக்கான கும்பாபிஷேக விழா அழைப்பிதழ்கள் |
| வா.சா.ஆ. 6 | – | வாதி கோவிலுக்கான மின் கட்டண ரசீதுகள் (9 எண்ணம்) – அசல் |
| வா.சா.ஆ. 7 | – | வாதி கோவிலுக்கு கொடிமரத்திற்கான தேக்கு மரம் வாங்குவதற்கு வனத்துறை வழங்கிய அனுமதி கடிதம் |
| வா.சா.ஆ. 8 | – | தாவா கோவிலை காட்டும் புகைப்படம் (எண்ணம் 5) குறுந்தகடுடன் கூடியது |
| வா.சா.ஆ. 9 | – | வாதி கோவிலில் உள்ள கல்வெட்டுகளின் புகைப்படங்கள் (எண்ணம் 3) |
| வா.சா.ஆ. 10 | 16.02.2023 | பிரதிவாதி, வாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு |
| வா.சா.ஆ. 11 | 24.02.2023 | வாதிகள், பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு – அலுவலக நகல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :-**

பி.சா. 1 – திரு. கிருஷ்ணமூர்த்தி (பிரதிவாதி)

பி.சா. 2 – திரு. பிரேம்குமார் மைக்கேல் (அடையகருங்குளம் கிராம நிர்வாக அலுவலர்)

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ. 1 | -- | புல எண்.131/3 ன் நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேடு – சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ. 2 | -- | தாவா கோவிலுக்கு 1965ம் ஆண்டில் நடைபெற்ற கும்பாபிஷேகத்திற்கான அழைப்பிதழ் – அசல் |
| பி.சா.ஆ. 3 | 08.08.2022 | பிரதிவாதி கொடுத்த புகார் மனுவிற்கு அம்பாசமுத்திரம் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட மனு ரசீது |

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ. 4 | -- | பிரம்மதேசம் ஊரில் உள்ள அங்காள பரமேஸ்வரி அம்பாள் திருக்கோவில் சம்பந்தப்பட்ட திருவிழா அழைப்பிதழ் |
| பி.சா.ஆ. 5 | -- | தாவா கோவிலுக்கு அச்சடிக்கப்பட்ட மகா கும்பாபிஷேக அழைப்பிதழ் |
| பி.சா.ஆ. 6 | 09.02.2022 | பிரதிவாதி, கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பிய மனுவின் கை ஆதரவு நகல் ரசீது மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| பி.சா.ஆ. 7 | 08.02.2023 | பிரதிவாதி, காவல்துறையினருக்கு அனுப்பிய மனுவின் கை ஆதரவு நகல் மற்றும் அஞ்சல் ஒப்புதல் அட்டை |
| பி.சா.ஆ. 8 | 21.11.1951 | தாவா சொத்தினைப் பொறுத்து பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் (ஆவண எண்.1663/1951) – கணினிவழி சான்றிட்ட நகல் (அசல் ஆவணம் தொலைந்துவிட்டது) |
| பி.சா.ஆ. 9 | – | புல எண்.131/3 மற்றும் 131/4 க்கான நத்தம் நிலவரித் திட்ட தூய அடங்கல் பதிவேடு |
| பி.சா.ஆ. 10 | 20.06.2022 | பிரதிவாதி, தமிழக ஆளுநருக்கு அனுப்பிய மனுவின் கை ஆதரவு நகல் |
| பி.சா.ஆ. 11 | 25.04.2023 | பிரதிவாதி, அனுப்பிய மேற்படி மனுவிற்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து தரப்பட்ட பதில் கடிதம் |
| பி.சா.ஆ. 12 | 28.02.2023 | பிரதிவாதியின் மனு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைத்திருப்பதைக் காட்டும் கடிதம் |
| பி.சா.ஆ. 13 | 14.02.2023 | பிரதிவாதி, தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| பி.சா.ஆ. 14 | 24.02.2023 | பிரதிவாதியின் வழக்கறிஞருக்கு கிடைக்கப்பெற்ற பதில் அறிவிப்பின் அசல் |
| பி.சா.ஆ. 15 | 16.03.2023 | அம்பாசமுத்திரம் வட்டாட்சியர் வழங்கிய குறிப்பாணை |
| பி.சா.ஆ. 16 | 02.03.2023 | பிரதிவாதி, காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனுவின் கை ஆதரவு நகல் மற்றும் அஞ்சல் ஒப்புதல் அட்டை |
| பி.சா.ஆ. 17 | 03.10.2022 | ராமலிங்கம், ஆதிமூலம் மற்றும் ஆழ்வார் ஆகியோருக்கு பிரதிவாதி அனுப்பிய கடிதம் மற்றும் அஞ்சல் ஒப்புதல் அட்டை |
| பி.சா.ஆ. 18 | 07.02.2024 | தாவா கோவில் வாதிகள் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டதென வாதிகள் வைத்த போர்டை அகற்றுவதற்கு பிரதிவாதி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு ரசீது |

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ. 19 | 15.02.2024 | பிரதிவாதி, அம்பாசமுத்திரம் காவல்துறை துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பிய புகார் மனு மற்றும் அஞ்சலக ஒப்புகை அட்டை |
| பி.சா.ஆ. 20 | 01.03.2024 | பிரதிவாதி, திருநெல்வேலி காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு இணையவழியில் கொடுத்த புகார் மனுவின் ரசீது |
| பி.சா.ஆ. 21 | 19.02.2024 | வாகைகுளம் பொதுமக்கள் காவல்துறை கண்காணிப்பாளர், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மற்றும் அம்பாசமுத்திரம் வட்டாட்சியர் ஆகியோர்களுக்கு அனுப்பிய புகார் மனு அஞ்சலக ஒப்புகை அட்டைகள் மற்றும் ரசீதுடன் கூடியது. |
| பி.சா.ஆ. 22 | 20.06.2022 | பிரதிவாதி, வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பிய புகார் மனு மற்றும் சார்பு செய்யப்பட்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை |
| பி.சா.ஆ. 23 | 08.08.2022 | தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 ன் கீழ் பொது தகவல் அலுவலர் பிரதிவாதிக்கு வழங்கிய தகவல் |
| பி.சா.ஆ. 24 | 27.05.2022 | பிரதிவாதி, அம்பாசமுத்திரம் வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பிய புகார் கை ஆதரவு நகல் |
| பி.சா.ஆ. 25 | 21.03.1970 | பிராது தபசில் சொத்தின் ஒரு பகுதியை பிரதிவாதியின் சகோதரர் கோமதிசங்கர் என்பவர் நன்கொடை பெற்றதற்கான ஆவணம் (ஆவண எண்.698/1970) – சான்றளிக்கப்பட்ட நகல் |
| பி.சா.ஆ. 26 | 30.01.2023 | மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை Crl.O.P.(MD)No.1679/2023 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நகல் |
| பி.சா.ஆ. 27 | 25.02.2025 | மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற W.P.No.6704/2025 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நகல் |

PRAVEENJEEVA P

Uploaded on 20.08.2026
Digitally signed by PRAVEENJEEVA P
Date: 2026.08.20 19:27:10 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ.)
அம்பாசமுத்திரம்.